# சைவநீதி

# SAIVANEETHI



SEPETEMBER -OCTOBER 2000

விக்கிரம புரட்டாதி

உ

சிவமயம்

# சைவநீதி

உள்ளே.....


1. **தமிழோடிசை பாடல்** ........................................ 1
2. **பஞ்சாக்கரத்திருப்பதிகம்** திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார். ............ 2
3. **வள்ளுவத்தில் சைவசித்தாந்தம் உயிரின் சார்பு நிலை**
சித்தாந்தரத்தினம் க.கணேசலிங்கம் ........................................ 3
4. **தெய்வநீதி** வித்துவான் வ. செல்லையா ........................................ 6
5. **கோலாலம்பூரில் குருபூசை வழிபாடு** சிவத்திரு.ஐ. குலவீரசிங்கம் .. 9
6. **வையந்தோறும் தெய்வந் தொழு** முருகவே பரமநாதன் .................. 10
7. **சைவவினாவிடை சிவலிங்கவியல்** ஆறுமுகநாவலர் .......................... 11
8. **கடையிற் சுவாமிகள்** ........................................ 16
9. **நவராத்திரி** செ. நவநீதகுமார் ........................................ 17
10. **வாயிலார் நாயனார்** சிவ. சண்முகவடிவேல் ........................................ 19
11. THE GREAT TEMPLE AND THE SHRI THEVAYANAI AMMAN
TEMPLE AT KATARA GAMA A. PILGRIM ........................................ 21
12. **கணபாலன் அவதரித்த கதை** பேராசிரியர் சக்திவேல் ........................ 25
13. **சைவநெறிப் பாடமும் பயிற்சியும்** ........................................ 28
14. **நடுவூர்க் கற்பகத்தைக் காண்பதினி என்று?**
பண்டிதர் ச. சுப்பிரமணியம் ........................................ 29
15. **இவ்வுலகப் பற்றறுந்து போயினனோ?** பம்பலப்பிட்டி கா.நீ. ........... 30

திருக்குறள் : அதிகாரம் - 7 **(Thirukkural Chapter -7)**



சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.

உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி

**மலர் 4 விக்கிரம புரட்டாதி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் -6**

## தமிழோடிசை பாடல்

இறைவனைப் பாடிப்பணிவதற்கு உரிய பாடல்கள் திருமுறைப்பாடல்கள். தனிவழிப்பாட்டிலும்சரி பொதுவழிப்பாட்டிலும் சரி தேவாரம் திருவாசகம் ஓதல் அவசியமானது. எமது சமயச்சடங்குகள், விழாக்கள் போன்றவற்றிலும் ஓதப்படுபவை திருமுறைப் பாடல்கள். ஒரு காலத்தில் மறைந்திருந்த இப்பாடல்களின் பெருமையை அறிந்த இராஜராஜ சோழர் இவற்றை அரும்பாடுபட்டுத் தேடி எடுத்து நம்பியாண்டார் நம்பி மூலம் திருமுறையாக வகுத்துச் சைவஉலகிற் பரவச்செய்தார்.

அக்காலத்தில் கோயில்களில் பண்ணோடு பாடவல்லவர்களை ஓதுவார்களாக அமர்த்தினர். கேட்போர் உள்ளம் உருகும் வண்ணம் கோயில்களில் திருமுறைப்பாடல்கள் ஒலித்தன. நித்திய, நைமித்திய பூசைகளில் உரியமுறையில் திருமுறைப்பாடல்கள் பாடி வழிபாடு நடந்தது.

பன்னிருதிருமுறைகளுள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் எனத் தொகுத்து "பஞ்சபுராணம்" எனத் திருவிழாக்களில் ஓதப்பட்டுவந்தன. இங்குத் திருப்புராணம் பாடும்போது பெரியபுராணப் பாடல்கள் மாத்திரமே பாடப்படல் வேண்டும் என்ற நியதி உண்டு பஞ்சபுராணத்தோடு முருகன் கோயில்களில் திருப்புகழ் பாடும் மரபும் உண்டு.

இன்று உரிய பண்ணிற் தேவாரம் பாடுதல் அரிதாகிவருகின்றது. பஞ்சபுராணத்தில் இடம்பெறாத பாடல்கள் பாடப்படுகின்றன. மகோற்சவக் காலத்தில் நவசந்திப் பண்பாடும் போது ஏதோ தேவாரம் பாடினால் போதும் என்ற நிலைகூடச் சில கோயில்களில் உண்டு. உரியவர்கள் இதனைக்கருத்திற்கொண்டு மரபுபேணி, வரும் சந்ததியினருக்கு வழிகாட்டவேண்டும்.

தினம்தோறும் வழிபாட்டிலே ஒவ்வொவரும் ஒரு பதிகத்தையாவது முழுமையாகப் பாராயணம் செய்ய வேண்டும். இப்பழக்கத்தைச் சிறுவயதுமுதலே குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்திப்பராயணம் செய்ய வழிவகுக்க வேண்டும். வீட்டிலே பொங்கல், பூசை நிகழும்போது தேவாரம் பாடும்படி கூறினால் பாடமுடியாத நிலையில் பலர் உள்ளனர். இதற்குக் காரணம் நாம் திருமுறைகளைப் பாராயணம் செய்வதில்லை. "தமிழோடிசை பாடல் மறந்தறியேன்" என்பார் அப்பரடிகள்.

துயர் நீங்குவதற்கு, நாளும் ஒருபதிகம் ஓதல் வேண்டும். தினம்தோறும் காலையில் அல்லது மாலையில் நீராடி இறைவனை வழிபடும்போது குடும்பத்திலுள்ளவர்கள் கூட்டாகவோ தனியாகவோ பதிகம் பாடிப் பணிதல் வேண்டும். இம்மாத இதழிலே ஐந்தெழுத்தின் சிறப்பை உணர்த்தும் சம்பந்தப்பிள்ளையாரின் திருப்பதிகம் வெளிவருகிறது. அனைவரும் பாடிப் பயன்பெறவேண்டும்.

# பஞ்சாக்கரத்திருப்பதிகம்

பண் - காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

துஞ்சலுந் துஞ்சலி லாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன வஞ்செ ழுத்துமே. 1

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. 2

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 3

நல்லவர் தீயரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றமர் கொண்டு போமிடத்
தல்லல்கெ டுப்பன வஞ்செ ழுத்துமே. 4

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே. 5

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையி லுந்துணை யஞ்செ ழுத்துமே. 6

வீடுபி றப்பை யறுத்து மெச்சினர்
பீடைகெ டுப்பன பின்னை நாடொறும்
மாடுகொ டுப்பன மன்னு மாநடம்
ஆடியு கப்பன வஞ்செ ழுத்துமே. 7

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டையி ராவணன்பாடி யுய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்டம ளிப்பன வஞ்செ ழுத்துமே. 8

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. 9

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. 10

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
அற்றமின் மாலையி ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ருமப ராவரே. 11

திருச்சிற்றம்பலம்

**பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை அறிவுஅறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற**

பெறக்கூடிய பேறுகளுள் அறியவேண்டியவைகளை அறியும் மக்களைப் பெறுவதைத் தவிர, வேறு சிறந்த பேறுகளை யாம் அறிந்ததில்லை. 61

# வள்ளுவத்தில் சைவ சித்தாந்தம்

சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம

## உயிரின் சார்பு நிலை

சார்புணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய் (குறள் 359).

வாழ்வியல் அனுபவங்களுக்கு நாம் சார்ந்திருக்கும் உலகும் உடலும் அதனோடுகூடிய கருவிகளும் காரணமாகிறன்றன. அவற்றின் சார்பின் வழியே எமது சிந்தனையும் செயலும் அமைகின்றன. இதனால் எல்லாப் பொருட்களுக்கும் சார்பாய செம்பொருளாகிய இறையை உணர்ந்து உய்ய முடியாதிருக்கிறது.

இந்தச்சார்பு நிலையே எமைப் பிணிக்கும் நோயாக உள்ளது. இந்த நோய் நீங்குவதற்கு நாம் சாரவேண்டிய செம்பொருளை உணர்ந்து, உலகப்பற்றுக் கெடுமாறு ஒழுகவேண்டும். மேற்குறிப்பிட்ட குறட்பா இதனை வலியுறுத்துகிறது.

## உயிரின் இயல்பு

உயிரின் இயல்பு பற்றிய கருத்துக்கள் பலவாக உள்ளன. இந்திய தத்துவங்கள், பொதுவாக அனைத்துப்பொருட்களையும் சத்(சத்து) அசத்(அசத்து)என்று இரு பகுதிகளாகப் பிரிக்கின்றன. இறை, உயிர். உலகு, உடல் முதலிய் பாசப்பொருட்கள் அனைத்தும் இவ்விரு பிரிவுகளில் அடங்கும்.

சைவசித்தாந்தம் மட்டும் உயிரை இவ்விரு பிரிவுகளிலும் அடக்கமுடியாதென்று, கருதி, அதனை ஒரு தனிப் பொருளாகக் கொண்டு "சதசத்" என்று அழைக்கிறது.

சத் அசத் என்ற சொற்களுக்குக் காணும் விளக்கங்களும் வேறுபடுகின்றன. உள்பொருள் இல்பொருள் நித்தியமானது - அநித்தியமானது. உயிருள்ள - உயிரற்றது, அழிவற்றது - அழிவுள்ளது, என்று பல்வேறு பொருட்களில் இச்சொற்கள் கையாளப்படுகின்றன.

சைவசித்தாந்தம் வேறுபட்ட இந்த விளக்கங்களையும் கருத்திற்கொண்டாலும் உயிர் இவ்விரு பிரிவுகளிலும் சேரக்கூடியதல்ல என்பதை உணர்கிறது. இதற்குக் காரணம் உயிரின் சார்பு நிலை குறித்த கருத்தே.

சத், அசத் என்ற சொற்களுக்கு உள்பொருள் இல்பொருள் என்று வேதாந்தம் பொருள் காணுகிறது. பிரமம் ஒன்றே உள்பொருள் என்பதும், மற்றையவை அதன் தோற்றங்கள் என்பதும் அதன் கொள்கை. இறைவனைப்போல் உயிரும் அனாதி என்று கொள்ளும் சைவசித்தாந்தத்திற்கு உடன்பாடற்றவை இக்கருத்துக்கள்.

சமணம், பௌத்தம், பொன்ற சமயங்கள், ஒருவகையில் உயிர் உள்பொருள் என்றும் இன்னொரு வகையில் அது இல்பொருள் என்றும் கருதுகின்றன. உள்ளதுமாம், இல்லதுமாம் (அஸ்தி நாஸ்தி)) உள்ளதுமில்லை, இல்லதுமில்லை என்று பல்வேறு விளக்கங்கள் அளிக்கின்றன. இவ்விளக்கங்களும் சைவசித்தாந்தங்களுக்கு உடன்பாடற்றவையே. அத்துடன் ஒரு பொருள் குறித்த எதிர்மாறான இருவேறு கருத்துக்கள் சைவசித்தாந்தத்தில் காணமுடியாதவை.

Among all the benefits that may be acquired,
We know no greater benefits than the acquisition of intelligent children. - 61

அசத்தாகிய பாசப்பொருட்களைச் சார்ந்திருக்கும்போது உயிர் அசத்தாகவே காணப்படுகிறது. ஆயினும் அது அசத்தல்ல. சத்தாகிய சிவத்தைச் சார்ந்திருக்கும்போது உயிர் சத்தாகவே இருக்கிறது. அனால் அது சிவத்தைப்போல் சத்தல்ல. இதனால் உயிரைச் சத சத்து என்று சைவசித்தாந்தம் அழைக்கிறது. . இது சார்பினால் அமைந்த உயிரின் இயல்பைக் குறிக்க வந்த பெயர் என்பது பெறப்படுகிறது.

சதசத் என்ற சொல் சத்தும் அசத்துமாக உள்ளது என்பதைக் குறிப்பதல்ல. சத்தும் அல்ல, அசத்தும் அல்ல என்பதைக் குறிக்கும்.

## சார்ந்ததன் வண்ணமாதல்

உயிர் அறிவுடைப்பொருள். இறைவனும் அறிவுடைப்பொருள். அவனின் அறிவு முற்றறிவாக இருக்க, உயிரின் அறிவு குறைவுடையதாக உள்ளது. பாசப்பொருட்கள் அறிவற்றவை.

முற்றறிவுடைய சத்தாகிய சிவனுக்கு அசத்தாகிய பாசப்பொருட்களை அறியவோ சாரவோ வேண்டிய அவசியமில்லை. அசத்தாகிய பாசம் எதையும் அறியவோ சாரவோ மாட்டாது. சத்தாகிய சிவத்தையும் அசத்தாகிய பாசத்தையும் அறியவும் சாரவும் கூடியது. சத்தாகிய உயிரொன்றே. இதனைப் பின்வரும் திருவருட்பாப்பாடல் விளக்குகிறது.

**‘சத்தசத்தைச் சாரா அசத்தறியா தங்கண் இவை**
**உயத்தல் சதசத்தாம் உயிர்’**

சதசத்தாகிய உயிர் ஒன்றில் அசத்தாகிய பாசப்பொருட்களைச் சார்ந்து அசத்தாகிய வண்ணம் இருக்கும். இல்லையேல் சத்தாகிய சிவத்தைச் சார்ந்து சத்தாகிய வண்ணம் இருக்கும். இது அதன் சார்பு நிலை; அதன் இயல்பு. சைவசித்தாந்தம் இதனைச் சார்ந்ததன் வண்ணமாதல்” என்று கூறிவிளக்கும்.

## சார்பு உணர்தல்

உலகியல் வாழ்வில் உழன்றுதான் சாந்தவற்றின் தன்மையைப் பெறுதல் உயிரின் இயல்பு. ஆயினும் அதன் தன்னியல்பு அழிவதில்லை என்பது சைவசித்தாந்தக் கருத்து. இது போன்ற சித்தாந்தக் கருத்துக்கள் சைவசித்தாந்த நூல்கள் தோன்றப் பல நூறு அண்டுகள் முன்னரே தமிழகத்தில் இருந்தன. இன்றுள்ள பழம்பெரும் நூலான தொல்காப்பியம் உயிரின் இந்த இயல்பை எழுத்துக்களின் இலக்கணம் கூறும் முறையில் விளக்குகிறது.

“மெய்யொடு இயையினும் உயிரியல் திரியா” என்ற தொல்காப்பியத் தொடர் இதற்கு ஒரு உதாரணம். பிறவிகள் தோறும் உயிர் உடம்புடன் இசைந்து, உடம்பாகவே இயங்குகிறது. ஆயினும் உடம்புக்குள்ள அநித்தியத்தன்மை உயிருக்கு இல்லை. அதன் இயல்பு நிலை மாறுவதில்லை. இதனை விளக்கும் தொல்காப்பிய நூல், இது போன்ற பல சைவசித்தாந்தக் கருத்துக்களைக் கொண்டுள்ளது. சைவசித்தாந்தம் தமிழகத்தில் உருவான சிறந்த தத்துவம் என்பது உலக அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று.

உயிர் அல்லது ஆன்மா அதன் வளர்ச்சியில் பல படிகளைத் தாண்ட வேண்டியள்ளது. பல பிறவிகள் எடுத்தெடுத்துப் பலவித அனுபவங்களைப் பெற்று, அறியாமைக்கு ஏதுவாகிய ஆணவத்தின் பிடி நீங்கி இறுதியில் இறைவனைச் சேர்கிறது. இந்த இறுதி நிலை கிட்டும்வரை அசத்தாகிய பாசப்பொருட்களுடன் சேர்ந்தே உயிர் இருக்கிறது. இந்தச் சார்பினால் அது தன்னையும் அறியமுடிவதில்லை; தனக்கு மேலான தலைவனையும் அறிய முடிவதில்லை. இந்தச் சார்புநிலை நீங்கினாற்றான் அது இன்னொன்றைச் சார நேரும், அந்த இன்னொன்று சத்தாகிய இறையன்றிப் பிறிதில்லை.

**எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்**
**பண்புடை மக்கட் பெறின்**
பழி இல்லாத நற்குணங்களையுடைய மக்களைப் பெற்றால்,
பெற்றோர்க்கு ஏழு பிறவியிலும் துன்பங்கள் அணுகமாட்டா. - 62

உயிரின் சார்பு நிலை கெடுவதற்கு அது சார்ந்திருக்கும் பொருளையும் உணர வேண்டும்; இனிச் சாரவேண்டிய பொருளையும் உணரவேண்டும் "சார்புணர்ந்த" என்ற திருக்குறள் தொடர் இதனையே குறிக்கிறது. ஆயினும் உரையாசிரியர்கள் பெரும்பாலும் இனிச் சாரவேண்டிய இறைபற்றியே குறிப்பிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகையும் உடலையும் சாந்திருக்கும் போது பொறிபுலன்கள் வழியே எதையும் அறிகிறோம். இங்ஙனம் பெறும் அறிவு குறைவுடையதாக இருக்கிறது. ஆசாபாசங்களால் உந்தப்பட்டு, செயல் புரிந்து, அனுபவம் பெற்று, அதன்மூலம் வந்தது இந்த அறிவு.

ஐம்புலன்களும் செலுத்திய வழியில் உயிர் செயறபடுகிறது. அவையே உயிரின் குடும்பத்தினராகக் கொள்ளப்படுகிறது. அவற்றின் இயல்பே உயிரின் இயல்பாய் அமைகிறது. ஐம்புலன்களிலிருந்து வேறுபட்டது. உயிர், அதன் இயல்பு வேறானது என்ற உணர்வு உதித்தலே சார்புணர்தல் எனலாம்

சிவஞானபோதம் ஐம்புலன்களையும் வேடர்கள் என்றும் அந்த வேடர் குலத்தினில் அதற்கு வேறான உயிர் வளர்கிறது என்றும் நயமாக உணர்த்தும் "ஐம்புலன் வேடரில் அயர்ந்தனை வளர்ந்தென" என்பது இது குறித்த சிவஞானபோதத்தொடர். இந்தச் சார்புநிலையை உணர்வதும் சார்புகெடுவதற்கான வழியில் ஒழுகுவதாகும்.

"சார்புணர்தல்" என்ற தொடருக்குப் பரிமேலழகர் காணும் பொருள் - எல்லாப் பொருள்களுக்கும் சார்பாய செம்பொருளை உணர்தல், என்பதே - டாக்டர் மு.வ. போன்ற அறிஞர்களும் இதே பொருளில் உரைகண்டுள்ளனர். நாம் சாரவேண்டிய பொருள் சிவம் எனும் செம்பொருள் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது.

அனைத்தையும் கடந்த பரம்பொருளுக்கு இச்சைஞானம், கிரியை ஆகிய ஆற்றல்கள் உண்டு என்று ஒருவகையில் கூறுவது சித்தாந்த மரபு. உயிருக்கும் இச்சை, ஞானம். கிரியை ஆகியவை உண்டு. இறையாற்றல் போலன்றி உயிரின் ஆற்றல் மட்டுப்பட்டது.; குறையுடையது. இந்தக் குறையில்லையேல் உயிரும் இறையும் ஒரேதன்மைத்தாகக் கருதத்தக்கன. இதனால் அசத்தைவிடச் சத்தாகிய சிவத்தையே சாரவேண்டியது, உயிர் என்பது புலனாகும். ஆணவத்தின்சேர்க்கையால் அது தன் நிலையிழந்து ஐம்புலடோருடன் வளர்வது அதன் இயல்புக்கு மாறானது. தனக்கு அன்னியமற்ற இறைவனைச்சார்தலே அதன் இயல்புக்கு ஏற்றது. அது சாரவேண்டியது, இறையாகிய மெய்ப்பொருள் என்ற உணர்வுவந்தால் இப்பொழுது இருக்கும் சார்புநிலை கெடும். அது கெடும்பொழுது அதனால் பிணிக்கப்பட்டு உலகியலில் உழலும் நிலை மாறும்.

பரம் பொருளாகிய சிவம் எமக்கு அன்னியம் இல்லை என்ற உணர்வே சார்புணர்தல். இந்த உணர்வே இறையருளாகிய திருவடிக்கு எம்மைச் செலுத்தும். இதனைக் குறிப்பிட்ட குறள் உணர்த்துகிறது. சைவசித்தாந்த முதன்மை நூலான சிவஞானபோதம் இதனை "அன்னியமின்மையின் அரன்கழல் செலுமே" என்று கூறி விளக்குகிறது.

**சித்தாந்த நோக்கு**

திருக்குறட் கருத்துக்கள் பல சைவசித்தாந்த நூல்களில் இடம் பெற்றிருப்பது முன்னைய கட்டுரைகளில் காட்டப்பட்டுள்ளது. திருக்களிற்றுப்படியார் என்ற சித்தாந்த நூல்

**8ம் பக்கம் பார்க்க**

The evils of the seven births shall not touch those who obtain children of a good disposition and free from vice. - 62

# தெய்வ நீதி

வித்துவான் . வ. செல்லையா

குலோத்துங்க பாண்டியன் மதுரையிலிருந்து பாண்டி நாட்டைச் செவ்வனே ஆட்சி செய்து வந்தான் அந்நாளில் திருப்புத்தூரிலிருந்து மதுரையை நோக்கிக் காட்டு மார்க்கமாக ஒரு பிரமணன் தன் குடும்பத்தோடு வந்து கொண்டு இருந்தான். அவன் தன் மாமன் வீட்டுத் திருமணத்திற்காக வந்தான். வரும் வழியில் தன் மனைவியின் தாகத்தைத் தணிப்பதற்காக அவளையும் குழந்தையையும் ஒரு ஆலமரத்தடியில் இருத்தினான். தான் நீர் எடுக்கச் சென்றான். அவ்வாலமரத்தின் முன்னர் எய்யப்பட்ட அம்பொன்று கோப்புண்டு கிடந்தது. காற்றுபலமாக வீசப் ஆரம்பானது அம்பு கீழே விழுந்தது. அப்போது ஆலமரத்தின் கீழிருந்த பார்ப்பனத்தியின் வயிறு கிழிய அம்பு ஊடுருவிற்று. அவள் உயிர் பிரிந்தது.

அந்நேரம் அம்பு தொடுத்த வில்லுடன் ஒரு வேடன் வெயிலுக்கு ஒதுங்க நிழல்தேடி அங்கு வந்தான். தண்ணீருடன் பிராமணன் ஆலரமரத்தடிக்கு வந்தபோது மனைவி அம்புதாக்கி இரத்தம் பெருக இறந்து கிடப்பதைக் கண்டான் மனங்கலங்கி அறிவழிந்தான் பின்னர். ஒருவாறு தேறி இவளை யார் கொன்றிருக்கலாம் என்று சுற்றுமுற்றும் பார்த்தான். அங்ஙனம் தேடும்போது ஆலமரத்தின் ஒரு பக்கலில் நின்ற வேடனைக் கண்டான். இவ்வேடன் அம்புதொடுத்த வில்லுடன் நின்றான். "அடே பாவி! என்மனைவியைக் கொன்றவன் நீதான் என்று ஓலமிட்டுக்" கூறினான். பாண்டியன்மேல் ஆணையிட்டான். வேடனை வலிந்து அழைத்துக்கொண்டு, மனைவியின் பிரதத்தைத் தோள்மீது சுமந்தும் பாலுக்காக அழுதுகதறும் குழந்தையை அரையில் அணைத்துக்கொண்டும் கண்ணீர் சோர விரைந்து மதுரையை அடைந்தான்.

பிராமணன் அரசவையிற் சென்றதும் மனைவியின் பிரேதத்தை அங்கு வைத்தான். வேடனை முன் நிறுத்திக் கண்ணீர் சோரவாயில் காவலர்களை நோக்கிக் கூறுவான். "மகாராசாவே! முறையோ? முறையோ? அரசனுறங்கும் பொழுதும் அவனுடைய ஆணையினாலே உலகமெலாம் தருமநெறி வழுவாது காக்கப்படும் என்பார்கள் பெரியோர்கள். இவ்வேடன் செய்த கொலையைக் காவாதபோது அது எங்ஙனம் பொருந்தும்?" என்றான்.

வாயிற் காவலர்கள் பாண்டியன் முன்பு போய் மன்னனை வணங்கி "மகாராசாவே! நம் வாயிலிலே ஒரு பிராமணன் தன் மனைவியைக் கொன்ற வேடனையும் அழைத்து வந்து முறையிட்டு நிற்கிறான்" என்று விண்ணப்பித்து நின்றார்கள். உடனே பாண்டியன் அஞ்சி, என் செங்கோன் முறை நன்று! நன்று! என்று மனந்தளர்ந்தான். பின் வாயிலையடைந்து அங்கும் கண்ணீர் சோரநின்ற பிராமணனைப் பார்த்து "ஐயா! நீர் ஏன் வருந்துகிறீர் சொல்வாயாக என்று" வினவினான். பிராமணன் மகாராசாவே! நான் இவளை ஆல மரநிழலில் இருத்திவிட்டுத் தாகம் தீர்ப்பதற்குத் தண்ணீர் கொண்டு வரச் சென்றேன். திரும்பி வந்த போது இவளை வேடன் கொன்றுவிட்டு அயலில் நின்றான்" என்று கூறினான். அது கேட்ட அரசன் வேடனைப் பார்க்க, வேடன் அரசனை வணங்கி "அரசே! அடியேன் இளைப்பாறும் பொருட்டு ஆலமர நிழலின் ஒரு பக்கத்திலே போய்நின்றேன். நான் இவளைக் கொன்றேனல்லேன்; கொன்றவனைக் கண்டேனுமல்லேன். என்றான். அங்கு நின்றவர்கள் பார்ப்பனத்தியின் உடம்பிலே அம்பு ஏறுண்டது எப்படி என்று வேடனை வினவினர். வேடன் "மெய்யாகவே

**தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்**
**தம்தம் வினையான் வரும்**
தம் மக்களைத் தம் செல்வமென்று பாராட்டுவர் பெற்றோர்.
அம்மக்களின் மகச்செல்வம் அவரவர் வினைக்கு ஏற்றவாறு வரும். - 63

நானொன்றுமறியேன்" என்றான். மந்திரிமாரும் பிறரும் இவன் "நான் இக்கொலையைச் செய்யவில்லை" என்று கூறுவானேதவிர, கொலையைச் செய்தேன் என்று ஒப்புவானா? இவனைத் தண்டித்தாலன்றி உண்மை சொல்லான் என்றார்கள். பாண்டியனும் "அப்படியே செய்யுங்கள்" என்றான்.

தண்டஞ்செய்வோர் வேடனைத் தண்டித்துக் கேட்டனர். அப்பொழுதும் அவன் முன்னர் சொன்னபடியே சிறிதும் மாற்றம் இன்றிக் கூற நன்றாய் ஆராயுங்கள் என்றான் அரசன். இவன் கடுந் தண்டத்துக்கும் அஞ்சுகின்றான் இல்லை ஒரு வார்த்தையையே சொல்லி வருகிறான். கொலைக் குறிப்பு இவன் முகத்தில் தெரியவில்லை. இப் பெண்ணைக் கொல்வதால் இவனுக்கு என்ன பயன் உண்டு வேட்டையாடும்போது விட்ட அம்பு இலக்குத் தவறி இவளில் பட்டு இறந்திருக்கலாம் என்று மன்னன் பலவாறாகச் சிந்தித்து வேடனைச் சறையிலிடுமாறு பணித்தான். பிராமணனை மனைவியின் மரணக்கிரியைகளை முடித்து வரும்படி கூறினான்.. இதன் உண்மையை ஆராய்ந்து பிராமணனின் துயர் துடைப்பேன் என்று பாண்டியன் ஒரு முடிவுக்கு வந்தான்.

பிராமணன் மயானக் கிரியைகள் முடித்து அரண்மனை வாயிலுக்கு வந்தான் மன்னன் அவனை அவ்விடத்தில் இருத்திவிட்டுத் தான் சோமசுந்தரக் கடவுளின் ஆலயஞ்சென்று இறைவனைப் பிரார்த்தித்து வேண்டுதல் செய்தான். "எம்பெருமானே! பார்ப்பனத்தி இறந்தது இவ்வேடனாலோ பிறராலோ என்பது தரும நூலாலே சிறதும் அறிய முடியாதிருக்கிறது. நீர் உமது திருவருளினாலே தமியெனுக்கு உணர்த்தியருளும்" என்று வேண்டி நின்றான். அப்பொழுது ஆகாயத்தினின்றும், "பாண்டியனே இந்நகரத்துக்குப் புறத்திலுள்ள செட்டித் தெருவில் ஒரு வீட்டில் இன்று கல்யாணம் நடக்கும். பிராமணனுடன் அங்கே வா இதன் உண்மையை உமக்கு அறிவிப்போம்" என்று அசரீரி வாக்குத் தோன்றியது. அத்திருவாக்கைச் செவிமடுத்த பாண்டியன் மனநிறைவோடு அரண்மனை வந்து அன்றிரவே அங்குள்ள செல்ல ஆயத்தமானான்.

பாண்டியன் மாறுவேடம் பூண்டு பிராமணனையும் அழைத்துக்கொண்டு கல்யாண வீட்டுக்குச் சென்றான். அங்கு ஓர் பக்கத்தில் பிராமணன் போய் இருந்தான். மன்னன் யாவற்றையும் அவதானித்துக் கொண்டு நின்றான். அப்பொழுது இயமனால் விடுக்கப்பட்ட தூதுவர்கள் இருவரில் ஒருவன் மற்றவனிடம் "இன்றைக்கே இம்மணமகனுடைய உயிரைக் கொண்டு வரும்படி இயமன் கட்டளை யிட்டிருக்கிறான். இவனுடம்பில் ஒரு வியாதியும் இல்லையே. யாதொரு காரணமுமின்றி இவனுயிரைக் கவர்வதெப்படி? இதற்கு யாது செய்வோம்" என்றான். அதற்கு மற்றவன் இற்றைப்பகலில் ஆலமரத்தில் ஏறுண்டு கிடந்த அம்பினைக் கீழுருந்த பிராமணத்தி மீது காற்றினால் விழப்பண்ணி அவளுயிரைக் கவர்ந்தோம். அப்படியே இப்பொழுது கலியாண ஆரவாரத்தில் மக்கள் களித்திருக்கின்றனர். புறத்தே நிற்கும் பசுவொன்று கயிற்றை அறுக்கும்படி செய்வோம். மேளச் சத்தத்துக்கு அது வெருண்டு ஓடி மணமகனை முட்டவைத்து அவன் உயிரைக் கவர்வோம்." என்றான். அது கேட்ட பாண்டியன் பிராமணனைப் பார்த்து "இந்த வார்த்தையைக் கேட்டாயா?" என்றான். "இவன் இப்படியே இறந்தால், என் மனைவி இறந்ததும் அப்படியென்று துணியலாம் இருந்து பார்ப்போம்" என்றான் பிராமணன்.

கலியாண நிகழ்ச்சிகள் ஆரம்பமானபோது மேளவார்த்தியம் பலமாக ஒலித்தது. அவ்வோசையிற் பசு வெருண்டு கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடிப்போய் மணமகனை

Men will call their sons their wealth, because it flows to them through the deeds which they perform on their behalf. - 63

முட்டிற்று. அவன் இறந்தான். மணமகன் பிணமாகவும், மணப்பறை பிணப்பறையாகவும் வாழ்த்தொலி அழுகை ஒலியாகவும் ஒரு கணப்பொழுதில் மாறிவிட்டன.. பிராமணன் அதைக்கண்டு வியப்புற்றான். தன் மனைவி இறந்த துயரிலும் அதிக துக்கங் கொண்டான்.

பாண்டியன் பிராமணனோடு அரசகோயிலிற் புகுந்து மந்திரி மாருக்கும் பிறருக்கும் இச் சம்பவத்தைத் தெரிவித்தான். பிராமணனுக்கு வேண்டும் பொருள் கொடுத்து மறுமணஞ்செய்து கொள்ளக் கடவாய் என்று கூறி அனுப்பி வைத்தான். வேடனைச் சிறையினின்றும் விடுவித்து "நாம் அறியாமையாற் செய்த கொடுந் தண்டத்தைப் பொறுக்கக்கடவாய்" என்று கூறி, அவன் [illegible] அருள் சுரந்து அவனுக்கும் வேண்டுவன கொடுத்து அனுப்பினான். பின்னர் தன் நீதியைத் தவறாது கடைப்படிக்க வைத்த ஆலவாய் இறைவனின் ஆலயமடைந்தான். "எம்பெருமானே! நீர் பாவியேன் பொருட்டுப் பழியஞ்சு நாதராயிருந்தீர்! என்று சொல்லிப் பன்முறை அட்டாங்க நமஸ்காரஞ் செய்து துதித்து நின்றான். பின் "தெய்வ நீதியை" நினைத்துக்கொண்டு தன் மாளிகை அடைந்து உலகினுக்கு உயிராயிருந்து அரசியற்றி வந்தான்

9ம் பக்கம் தொடர்ச்சி

சித்தாந்தரத்தினம் இ. கணேசலிங்கம் அவர்களின் "அறிவியல் நோக்கில் சைவசித்தாந்தம்" என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது.

திருமுறைவழி இல்லவழிபாட்டில் மணி, சூடம், சாம்பிராணி, ஊதுபர்த்தி, வீபூதி, தூபக்கால், ஒற்றைமுகத்தீபம், பஞ்சபாத்திரம், தீர்த்தக்கரண்டி, தீர்த்தக்கிண்ணம், சிறியதட்டு, உதிரிப்பூக்கள், முதலியன உபயோகிக் கப்பட்டன. இறைபக்தியை வளர்க்கும் இவ்வழிபாடு சைவமக்கள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியது. தமிழகத்திலும் ஈழத்திலும் கூட இத்தகைய சிறந்த வழிபாட்டைக் காணமுடியாது.

கோலாலம்பூரிலும் பிற இடங்களிலும் சைவசமய எழுச்சியையும் விழிப்புணர்வையும் இன்று காணமுடிகிறது. சிவத்திரு. க. கணேசலிங்கம் அவர்கள் பல கோயில்களுக்கு அழைக்கப்பட்டுச் சைவசமயச் சொற்பொழிவுகள் ஆற்றக்கேட்டுப் பயன் அடைந்தனர். காயாங் என்ற இடத்திலுள்ள ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நடைபெறும் சித்தாந்த வகுப்பில் இவரின் சிறப்பு வகுப்பு நடைபெற்றது. அதில் மாணவரின் சைவசித்தாந்தம் தொடர்பான ஐயங்கள் தீர்க்கப்பட்டன.

5ம் பக்கம் தொடர்ச்சி

மேற்குறிப்பிட்ட குறளை விளக்குகிறது. அதன் விளக்கம் சித்தாந்த நோக்கில் அமைந்துள்ளதாயினும் எல்லாவகையிலும் பொருத்தமாகவும், சரியாகவும் இருக்கிறது.

பாசப்பொருட்களுடனான சார்புகெட்டுச் சாரவேண்டிய பரம்பொருளை எண்ணி ஒரு முகமாக இருத்தல் தியானம். இந்த நிலையும் மாறிச் சார்பு பற்றிய சிந்தனையின்றிப் பரம்பொருளே அனைத்துமென்ற நிலையில் இருப்பது சமாதி. இது "அவனே தானே ஆகிய அந்நெறி என்று சிவஞானபோதம் கூறுவதை ஒக்கும். இவற்றை விளக்கும் திருக்களிற்றுப்படியார் பாடல் வருமாறு:

"சார்புணர்ந்து சார்புகெட வொழுகினென் றமையால்
சார்பணர்வு தானே தியானமுமாஞ் - சார்பு
கெடவொழுகினல்ல சமாதியுமாங் கேதப்
படவருவ தில்லைவினைப் பற்று"

**அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
**சிறுகை அளாவிய கூழ்**
தம் மக்களின் சிறுகைகளால் துழாவிக் குழைக்கப்பட்ட உணவு, பெற்றோர்க்கு அமிழ்தத்தை விட மிக்க இனிமையுடையதாகும். - 64

# கோலாலம்பூரில் குருபூசை, வழிபாடு

சிவத்திரு ஐ. குலவீரசிங்கம்.
கோலாலம்பூர், மலேசியா.

மலேசியா, கோலாலம்பூரில் சைவ சமய நிகழ்ச்சிகள் சில அண்மையில் மிகச் சிறப்பாக நடந்தேறின. சைவப்பெரியார் சிவபாத சுந்தரனாரின் குருபூசையும் திருமுறை வழியில் இல்ல வழிபாட்டுப்பயிற்சியும் இவற்றில் முக்கியமானவை.

அங்குள்ள திருக்கைலாய குருபரம்பரைத்தின இயக்கம் சைவம் தழைத்தோன்டுவதற்குரிய அரிய பணிகளைச் செய்கிறது. ஆறுமுகம் ஐயா என்று பலராலும் அன்புடனே போற்றப்படும். முதுபெரும் சைவச்சான்றோராகிய ஆறுமுகம் அவர்களின் முயற்சியால் உண்டாகியது; இவ்வறக்கட்டளை திருக்கைலாய குருபரம்பரைத்தினத்தையும் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் குருபூசைத்தினத்தையும் ஆண்டுதோறும் கொண்டாடுகிறது. அப்பொழுது சிவபாத சுந்தரனாரின் நூலொன்றும் மிள்பதிப்புச்செய்து வெளியிடப்பட்டது.

இவ்வாண்டு 19.08.2000ல் இந்நிகழ்ச்சி சைவசிந்தாந்தகலாநிதி டான் ஸ்ரீ.மு. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சிவபாதசுந்தரம் அவர்களின் "கந்தபுராண விளக்கம்" நூல் இந்நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது. இந்நூல்பற்றிச் சைவசிந்தாந்த கலாநிதி. டாக்டர். தேவபூபதி நடராஜா அவர்கள் ஆய்வுரை செய்தார்கள். இதனைத் தொடாந்து தமிழகத்திலிருந்து வருகைதந்த ஈழத்தறிஞரும் இலண்டன் மெய்கண்டார் ஆதீனப்புலவருமான சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம் அவர்கள "சிவபாதசுந்தரனாரின் சைவக்கோட்பாடு" என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். மாணவர் நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய இவ்விழா சைவப்பெரியாரின் பணிகளை அறியவும், சைவசமயத்தை வளர்க்கவும் பெரிதும் துணை புரிந்தது.

கோலாலம்பூரில் நடைபெற்ற இன்னொரு சிறந்த நிகழ்ச்சியான "திருமுறைவழி இல்லவழிபாடு" மலேசியா அருள்நெறித்திருக்கூட்ட மண்டபத்தில் 31.08.200ல் சிவபூசகர் ஆர். சண்முகம் அவர்களால் நடத்தப்பட்டது. பெருந்திரளான சைவமக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சிகள் காலை 8.00மணிக்குத் தொடங்கி மாலை 5.00மணிக்கு முடிவடைந்தது.

"திருமுறைவழி இல்லவழிபாட்டுச் செய்முறையைச் சிவபூசகர் சண்முகம் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தபின் பயிற்சிப்பட்டறை (Workshop) ஆரம்பமானது. ஒவ்வொரு குழுவாக அமைந்த இப்பட்டறையில் மாணவர்களும் முதியவர்களும் மிகுந்த ஆர்வத்தடன் பங்குபற்றினர். இவ்வழிபாட்டில் பாடப்பட்ட திருமுறைகளுக்குச் சிவநெறிச்செல்வர் ந. தர்மலிங்கம் அவர்கள் விளக்கம் அளித்தார். இவ்வழிபாட்டின் ஒவ்வொரு கூறும் சிவபூசகர் சண்முகம் அவர்களால் நன்று விளக்கப்பட்டது. சபையாரின் கேள்விகளுக்கும் அவர்கள் விடையளித்தார்கள். இவ்விழாவின் இறுதி நிகழ்ச்சியாகச்

8ம் பக்கம் பார்க்க

The rice in which the little hand of their children has dabbled will be far sweeter (to the parent) than ambrosia. - 64

# வையந்தோறும் தெய்வந்தொழு

முருகவேபரமநாதன்

தெய்வந் தொழுமின் தெளிந்தாரப் பேணுமின் - சிலப்பதிகாரம்
ஆலயந் தொழுவது சாலவும் நன்று- கொன்றை வேந்தன்

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பூடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே

திருமந்திரம் 1418

சகமலா தடிமையில்லைத் தானலாற் றுணையுமில்லை
நகமெலாந் தேயக் கையால் நாண்மலர் தொழுதுதூவி
முகமெலாங் கண்ணீர் மல்க முன் பணிந் தேத்துந் தொண்பர்
அகமலாற் கோயிலில்லை யையனை யாற னார்க்கே

நான்காந்திருமுறை அப்பர் பெருமான் 40:8

வையம், வையகம் - உலகம், தெய்வம் - இறைவன் கடவுள், தொழு-வணங்கு. வையம் தோறும் தெய்வம் தொழு எனப் பாடிய ஔவையார். பொதுமை நோக்கிற் சொன்னாலும் சிவனைப்பற்றியே பேசினார் என்பது சிறப்பும்மையாற் காணலாம். சிவத்தைப் பேணில் தவத்திற்கழகு. சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருநாளும் இல்லை என்ற அருள்வாக்குகள் சிவனையே சுட்டுகின்றன. தெய்வம் இகழேல், திருமாலுக்கடிமை செய் போன்ற திருவாக்கியங்கள் மக்கள் மனங்களில் தெய்வபக்தியை ஆழப்பதிக்கின்றன. நம்மவர் எல்லாம் தாயின் மடியிலே தவழ்ந்து ஏணையிலே துாங்கி, குறுகுறு நடந்து ஓடியாடி விளையாடிபின் பள்ளிக்கு வைத்தாகள் அங்கே எம்மாசிரியப் பெருமக்கள் எழுத்தையறி வித்ததோடு ஔவையாரின் பாடல்களையும் செவிவழிக் கற்றுத் தந்தனர். இஸ்லாமியர், கிறீஸ்தவர் கூட ஔவையைப் பாடம் பண்ணினர். இதில் இருந்து நாம் பெற்ற சால்பு, ஒழுகலாறு பரம்பரை பரம்பரையாகவே கால்விட்டது. இதில் ஊறிப்போனவர்கள் ஒழுக்கச்செம்மல்களாக வாழ்ந்து வழிகாட்டினர். எமக்கு இத்தெய்வவணக்கம் யாவருக்கும் எச்சமயத்தோருக்கும் பொது. ஆனால் இஸ்லாமியத்தாருக்குச் சிறப்பைங்காலத் தொழுகை அவர்களின் கடமை. நாமும் அவர்களைப் பின்பற்றி நம்மைத் திருத்தியமைக்க வேண்டும். இன்றைய இளசுகள் முதுசுகளை நோக்கி ஏன் கோயில் போக வேண்டும்? ஏன் திருநீறு பூச வேண்டும்? ஏன் தேவாரம் படிக்க வேண்டும் எனக் கணை தொடுக்கிறார்கள். இதனால் கிறீஸ்தவம் எம்முள் ஊடுருவியே விட்டது.

எம் தாய் தந்தையர்கள் எம்மைச் சமய வாழ்விற்கும், ஒழுக்க வாழ்விற்கும் சாதனைகள் மூலம் தயார் பண்ணிவிட்டார்கள். நாம் பெற்றோருக்கும் பெரியோருக்கும் மூத்தோர், முதியோருக்கு ஆசிரியர் குருவுக்கும் பணிந்தோம். தெய்வத்துக்குப் பணிந்தோம். நாம் செய்வன எல்லாம் நீதியினின்றும் வழுவக் கூடாதெனக் கண்டோம். எமக்கு மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம். இந்நூற்றாண்டு இளமை மூத்துநிற்கிறது. நாடும் வீடும் அதனால் நலிந்து காணப்படுகிறது. எங்கள் பெற்றோர் சிறுவயதிலேயே கோயிலுக்குக் கூட்டிச் சென்று விபூதி பூசும் விதம், விழுந்து கும்பிடுவது எப்படி, ஆலயங்ளில் என்ன செய்யக் கூடாது என்றெல்லாம் கற்றுத்தந்து, எம் கையாலே உண்டியலிற் பணம் போடுவித்தார்கள். குருக்களிடம் விபூதி, சந்தனம், எப்படி வாங்குவதென்பதைச் சொல்லி வைவத்தார்கள். தீட்சை வைப்பிக்கவும், அநுஷ்டானம் செய்யவும் விரதம் மேற்கொளளவும் நம்மை வழிப்படுத்தி, கோயிற் தொண்டுகளையும் செய்வித்தனர். இந்த உயரிய வளர்ப்பு முறையால் நாம் உயாந்தோம், நம்மை உயர்த்தினோம். இவையெல்லாம் பழுதிலாத கர்மங்கள்.

இந்த ஆலயவணக்கமுறை எம்மை வளர்த்துவிட்டிருக்கிறது. நம்பெற்றோர் தாம்

15ம் பக்கம் பார்க்க

**மக்கள்மெய் தீண்டல் உடற்இன்பம் மற்றுஅவர்**
**சொல்கேட்டல் இன்பம் செவிக்கு**

தம் மக்களின் உடம்பைத் தொட்டு அணைத்துக் கொள்ளுதல் உடலுக்கு இன்பம் தரும். அம்மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டல் செவிக்கு இன்பம் தரும். -65

சைவவினாவிடை

# சிவலிங்கவியல்

ஆறுமுகநாவலர்

1. சிவபெருமானை ஆன்மாக்கள் வழிபடும் இடங்கள்ளவை?

சிவபெருமான், புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளும் குருவுஞ் சங்கமமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும் அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும் ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும் பதம் உபசாரத்தால், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைவ முதலியவற்றிற்கும் வழங்கும். (சைலம்சிலையா லாகியது)

2 சிவபெருமான் இவ்விடங்களில் நிற்பர் என்றது அவர் எங்கும் வியாபகர் என்றதனோடு மாறுபடுமன்றோ?

மாறுபடாது, சிவபெருமான்,எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர். மற்றை இடங்களி லெல்லாம் பாலில் நெய் போல வெளிபடாது நிற்பர்.

3. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?

பரார்த்த லிங்கம், இட்ட லிங்கம் என இருவகைப்படும்.

4 பரார்த்தலிங்கமாவது யாது?

சிவபெருமான் சங்கார காலம் வரையும் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அனுக்கிரகிக்கப் பெறும் இலிங்கமாம். இது தாவரலிங்கம் எனவும் பெயர் பெறும் சாந்நித்தியம் = அண்மை, அடுத்தல், வெளிப்படுத்தல். தாவரம் எனினும், திரம் எனினும் நிலையியற் பொருள் எனினும் பொருந்தும்.

5. பரார்த்தலிங்கம் எத்தனை வகைப்படும்?

சுயம்பு லிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம், ஆரிடலிங்கம், மானுட லிங்கம் என ஐவகைப்படும். இவைகளிலுள்ளே சுயம்பு லிங்கமானது தானே தோன்றியது. காண லிங்கமானது விநாயகர், சுப்பிரமணியர், முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிக லிங்கமாவது விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கமாகது இருடிகளாற்றாபிக்கப்பட்டது. அசுரர் இராக்தர் முதலாயினரால் தாபிக்கப்பட்டதும் அது. மானுட லிங்கமானது மனிதரால் தாபிக்ப்பட்டது.

6 இவ்வைவகையான லிங்கங்களும் ஏற்றக்குறைவு உடையனவா?

ஆம். மானுட லிங்கத்தின் உயர்ந்தது ஆரிட லிங்கம்.அதனினும் உயர்ந்தது தைவிக லிங்கம், அதனினும் உயர்ந்தது காண லிங்கம், அதனினும் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.

7. பரார்த்தலிங்கப் பிரதிட்டை பரார்த்த பூசை, உற்சவம் முலியவற்றைச் செய்தற்கு அதிகாரிகள் யாவர்?

ஆதிசைவர்களுள்ளே சமயதீக்ஷை, விஷேசதீக்ஷை, நிருவாணதீக்ஷை ஆசாரியா பிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர் களாய்ச் சைவாகமங்களிலே மகா பாண்டித்தியம் பெற்றவர்களாய் உள்ளவர்கள்.

The touch of children gives pleasure to the body,
the sound of their voice is pleasure to the ear. -65

8. திருக்கோயிலுள் ளிருக் குஞ் சிவலிங்கம் முதலிய திருமேனிகள் எல்லாராலுமே வழிபடற் பாலனவா?

ஆம். சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும் நான்கு மார்க்கத்தாராலும் வழிபடற் பாலனவேயாம்., ஆயினும் அவ்வழிபாடு அவரவர் கருத்து வகையால் வேறுபடவே, அவருக்குச்சிவபெருமான் அருள்செய்யும் முறைமையும் வேறுபடும்.

9. சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சரியையாளர்கள் எக்கருத்துப் பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வார்?

சரியையாளர்கள் பகுத்தறிதலில்லாது சிலிங்கம் முதலிய திருமேனியே சிவமெனக் கண்டு வழிபடுவர்கள். அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர்.

.10. கிரியையாளர்கள் எக்கருத்துப் பற்றி வழிபடுவர்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசானம் முதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக்கொண்டார் என்று தெளிந்து, மந்திர நியாசத்தினால் வழிபடுவர்கள். அவர்களுக்குச்சிவபெருமான் கடைந்த பொழுதிற் தோன்றும் அக்கினி போல, அவ்வம் மந்திரங்களினாலும் அவரவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று, அருள் செய்வர்.

11. யோகிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவர்கள்? அவர்க்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

யோகிகள் யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்குஞ் சிவபெருமான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசை கொண்டருள்வர் என்று தெளிந்து , மந்திர நியாசங்களினால் வழிபடுவார்கள். அவர்களுக்குச் சிவபெருமான் கறந்த பொழுதில் தோன்றும் பால் போல அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய் அவ்வத் திருமேனிகளில் அவ்வப் பொழுது தோன்றி நின்று அருள் செய்வார்.

12. ஞானிகள் எக்கருத்துப் பற்றி வழிபாடு வர்கள்? அவர்களக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

ஞானிகள் மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரும் போல ஓரிடமாகக் குறியாது அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள். அவர்களக்குச் சிவபெருமான் கன்றை நினைத்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியால் அவ்வன்பே தானமாகி எப்பொழுதும் வெளிப்பட்டு நின்று அருள் செய்வர்.

13. சிவபெருமானுடைய திருவுருவஞ் சிவசக்தி வடிவம் என்று முன் சொல்லப்பட்டதன்றோ; இங்கே அவர் திருவுருவம் மந்திர வடிவம் என்றது என்னை?

சிவபெருமானுக்கு வாச்சிய மந்திரமாகிய சிவசக்தியே உண்மை வடிவம். அச்சிவ சக்தி காரியினிடத்தே அக்கினி போல,வாசக மந்திரத்தினிடத்தே நின்று சாதகருக்குப்பயன் கொடுக்கும் ஆதலினாலே,சிவபெருமானுக்குச் சிவசத்தியினால் வாசக மந்திரத்தோடு சம்பந்தம் உண்டு. அச்சம்பந்தம் பற்றி வாசக மந்திரஞ் சிவபெருமானுக்கு உபசார வடிவமாம்.

14. மந்திர நியாசம் என்றது என்ன?

**குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்**
**மழலைச்சொல் கேளா தவர்**
தம் மக்களின் மழலைச் சொற்களைக் கேட்டு அறியாதவரே,
குழலிசை இனியது - யாழிசை இனியது என்று கூறுவர். -66

வாச்சிய மந்திரங்களாகிய சிவசக்தி பேதங்களை உள்ளத்திலே சிந்தித்து, அவைகளை அறிவிக்கும் வாசக மந்திரங்களை உபசரித்துச், சிவபெருமானுக் உபசார வடிவத்தை அம்மந்திரங்களாலே சிர முதலாக அமைத்தலாம். (நியசித்தல்= வைத்தல், பதித்தல்)

15. இட்டலிங்கமாவது யாது?

ஆசாரியர் விஷேச தக்ஷயைப் பண்ணி, சீடனைப் பார்த்து, "நீ உள்ளளவுங் கைவிடாது இவரை நாடோறும் பூசி"என்று அநுமதி செய்து, அடியேன் இச்சரீரம் உள்ளளவரையுஞ் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" என்று பிரதிஞ்ஞை செய்வித்துக் கொண்டு கொடுக்க அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இது, ஆன்மார்த்த லிங்கம் எனவும், சல லிங்கம் எனவும் பெயர் பெறும்.

16. இட்டலிங்கம் எத்தனை வகைப்படும்?

வாண லிங்கம்.படிக லிங்கம். இரத்தின லிங்கம். லோகஜ லிங்கம். சைல லிங்கம் , க்ஷணிக லிங்கம் எனப் பலவகைப்படும்.

17 இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள் யார்?

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச் சாதியாருள்ளும். அங்ககீன ரல்லாதவர்கள் இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள். இவர்களுள்ளும். பிணி யில்லாதவராய் இடம் பெருளேவல்கள் உனடயராய்ச் சிவபூசா விதி பிராயச்சித்த விதி மார்கழி மாதத்துக் கிருதாபிஷேகம் முதலாகப் பன்னிரண்டு மாதமுஞ் செய்யப்படும் மாதபூசாவிதி சாம்வற்சரிகப் பிராயச் சித்தமாகச் சாத்தப்படும் பவித்திர விதி முதலியவைகளை நன்றாக அறிந்தவராய் அறிந்தபடியே அநுட்டிக்க வல்லவராய் உள்ளவர் மாத்திரமே வாண முதலிய சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொண்டு பூசை பண்ணலாம். மற்றவரெல்லாரும் க்ஷணிகலிங்க பூசையே பண்ணக் கடவர். அவர் குளிக்கப் புகுந்து சேறு பூசிக்கொள்வது போலச் சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொள்ளப் புகுந்து பாவந் தேடிக்கொள்வது புத்தியன்று.

18. எவ்வகைப்பட்ட சிவலிங்கம் பிரதிட்டை செய்வித்துக்கெள்ளல் வேண்டும்?

சிவாகம விதிவிலக்குகளை ஆராய்ந்து, சிவலிங்கங்களைப் பரீக்ஷி செய்து யாதொரு குற்றமுற்றமும் இல்லாததாய் நல்லிலக் கணங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவலிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

19. க்ஷணிக லிங்கமாவது யாது?

பூசித்தவுடன்விடப்படும் இலிங்கமாகும்

20. க்ஷணிக லிங்கம் எத்தனை வகைப்படும்.?

மண்.அரிசி.அன்னம். ஆற்றுமணல். கோமயம். வெண்ணெய். உருத்திராக்ஷம் சந்தனம் கூர்ச்சம் புஷ்பமாலை சருக்கரை. மா எனப் பன்னிரண்டு வகைப்படும்.

21. மேலே சொல்லப்பட்ட பத்துச் சாதியாருள் அங்ககீனரும் மற்றைச் சாதியாருஞ் சிவபூசை பண்ணலாகாதா?

தங்கள் தங்கள் அதிகாரத்திற் கேற்ப ஆசாரியர் பண்ணிய தீக்ஷையைப் பெற்றுத் தூல லிங்கமாகிய தூபியையேனுந் திருக் கோபுரத்தையேனும் பத்திரபுஷ்பங்களால் அருச்சித்துத் தோத்திரஞ் செய்து

The pipe is sweet, the lute is sweet,
" say those who have not heard the prattle of their own children. -66

நமஸ்கரிப்பதே அவர்களுக்குச் சிவபூசை சூரிய விம்பத்தின் நடுவே சதாசிவ மூர்த்தி அநவரதமும் எழுந்தருளி யிருப்பர் என்று நினைந்து அவருக்கு எதிராகப் புட்பங்களைத் தூவித் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப்பதும் அவர்களுக்குச் சிவபூசை.

22. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டவர், பூசை பண்ணாது புசிக்கின் என்னை?

பூசை பண்ணாது புசிப்பது பெருங் கொடும் பாவம். அப்படிப் புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்துக்கும் மலத்துக்கும் சமம். அப்படிப்புசித்தவனைத் தீண்டல் காண்டல்களும் பாவம் ஆதலால், ஓரோவிடத்துப் பூசை பண்ணாது புசித்தவன் ஆசாரியரை அடைந்து அதற்குப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளல் வேண்டும்.

23. ஞானநிட்டையுடையவர் சிவபூசை முதலிய நியமங்களைச் செய்யாது நீக்கிவிடலாமா?

நித்திரை செய்வோர் கையில் பொருள் அவர் அறியாமலே நீங்குதல் போல ஞான நிட்டையுடையோருக்குச் சிவபூசை முதலிய நியமங்கள் தாமே நீங்கிற் குற்றமில்லை. அப்படியன்றி அவர் தாமே அவைகளை நீக்குவாராயின், நரகத்து வீழ்தல் தப்பாது.

24. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டவர் சனன மரண சௌசங்களில் யாது செய்தல் வேண்டும்?

திடபக்தியுடையவர் ஸ்னானஞ் செய்து ஈர வஸ்த்திரத்தைத் தரித்துக்கொண்டு, தாமே சிவபூசை பண்ணலாம். ஸ்னானஞ் செய்தமை முதற்பூசை முடியம் வரையுந் தாமரையிலையில் நீர் போல அவரை ஆசௌசஞ் சாராது. திட பக்தியில்லாதவர் ஆசௌசம் நீங்கும் வரையும், தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும், தம்மோடு ஒத்தவரைக் கொண்டாயினும்தம்முடைய பூசையைச் செய்வித்துத் தாம் அந்தரியாகஞ்செய்து கொண்டு, அப்பூசை முடிவில் புற மண்டபத்தினின்று புட்பாஞ்சலித்திரயஞ் செய்து நமஸ்காரம் பண்ண வேண்டும்.

25. வியாதியினாலே தம் கைகால்கள் தம் வசமாகாதிருப்பின் யாது செய்தல் வேண்டும்?

தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும், தம்மோடொத்தாரைக்கொண்டாயினும், தம் பூசையைச் செய்வித்து அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்.

26. சிவபூசையெழுந்தருளப் பண்ணிக்கொண்ட பெண்கள் பூப்பு வந்தபோது யாது செய்தல் வேண்டும்?

மூன்றுநாளும் பிறர் தண்ணீர் தர ஸ்நானஞ் செய்து, அந்தரியாகஞ் செய்தல் வேண்டும். நான்காம் நாள் ஸ்நானஞ் செய்து, பஞ்சகௌவியமேனும் பாலேனும் உட்கொண்டு மீண்டும் ஸ்னானஞ் செய்து, சிவபூசை செய்தல் வேண்டும். அம்மூன்று நாளும் அந்தரியாகஞ் செய்யாதொழியின், அக்குற்றம் போம்படி அகோரத்தை ஆயிரம் உருச் செபித்தல் வேண்டும்.

27. பெண்கள் தாம் பிரசவித்த சூதகம், தமக்குரியார் இறந்த ஆசௌசம், வியாதி இவைகள் வரின் யாது செய்தல் வேண்டும்.

வருணத்தாலும்,தீக்ஷையாலும் தம்மோடொத்தவரைக் கொண்டு பூசை செய்வித்தல் வேண்டும்.

28. ஆசௌசம், வியாதி முதலியவை வந்தபோது பிறரைக்கொண்டு பூசை செய்வித்தவர் யாவரும், ஆசௌச முதலியவை நீங்கிய பின், யாது செய்தல் வேண்டும்?

**தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல்**
தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மை, கற்றோர் அவையிலு் எல்லோரினும் மேம்பட்டு விளங்குமாறு அவனைச் சிறந்த கல்விமான் ஆக்குதலாம். 67

பிராயச்சித்தத்தின் பொருட்டு அகோரத்தை முந்நூறுருச் செபித்துத் தாம் பூசை செய்தல் வேண்டும்.

29. சிவலிங்கங் காணாவிடத்து யாது செய்தல்வேண்டும்?

அந்தரியாக பூசைசெய்து பால், பழ முதலியவற்றை உண்டு நாற்பது நாள் இருத்தல் வேண்டும். அவ்விலிங்கம் வராதொழியின், வேறொரு இலிங்கத்தை ஆசாரியார் பிரதிட்டை செய்து தரக் கைக்கொண்டு பூசை செய்தல் வேண்டும். அதன்பின் வந்ததாயின் அவ்விலிங்கத்தையும் விடாது பூசை செய்தல் வேண்டும்.

30. சிவலிங்கப் பெருமானுக்கு விசேஷ பூசை செய்யத்தக்க காலங்கள் யாவை?

பஞ்சாட்க்ஷர வியலிலே சொல்லப்பட்டவை முதலிய புண்ணிய காலங்களுஞ் சென்மத்திரயங்களுமாம். இன்னும் மார்கழிமாச முழுதினும் நாடொறும் நித்திய பூசையேயன்றிஅதற்குமுன் உஷத்கால பூசையும்பண்ணல்வேண்டும். சிவராத்திரி தினத்திலேபகலில்நித்திய பூசையேயன்றி இராத்திரியில் நான்கு சாம பூசையும் பண்ணல் வேண்டும். (சென்மத்திரயங்காவன பிறந்த நக்ஷத்திரமும், பத்தாநக்ஷத்திரமும் அதற்குப் பத்தா நக்ஷத்திரமுமாம்)

31. சென்மத்திரய பூசையால் வரும் விசேஷ பலன் என்ன?

சென்மத்திரயந் தோறும் சிவலிங்கப் பெருமானுக்கு பத மந்திரங்கொண்டு பாலினாலும் சர்க்கரையினாலும் விசேஷமாக அபிஷேகஞ் செய்து, சுகந்தத் திரவியங்கள் கலந்த சந்தனகுழப்பு சாத்திப் பாயச முதலியன நிவேதனஞ் செய்துகொண்டு வருபவரின் உற்பாதங் களும், பயங்கரமாகிய கிரகபீடைகளும் சகலவியாதிகளும் நீங்கும்.

**10ம் பக்கத் தொடர்ச்சி**

கோயிலுக்குப்போக வாய்ப்பில்லாத வேளையெல்லாம், இனத்தவர்களோடு எம்மை அனுப்புவர். காரணம் தெய்வீகம் நம்மோடு செறியவேண்டுமென்று, உள்ளூர் ஆலயங்கள் மட்டுமன்றி பிரபல்யமான வல்லிபுரக்கோயில், செல்வச்சந்நிதி, மாவிட்டபுரம், நல்லூர், நயினாதீவுக்கெல்லாம் அழைத்துச் சென்றனர். இப்பழக்கம் நாம் வளர்ந்ததும் கேதீஸ்வரம், கோணேஸ்வரம்,முன்னேஸ்வரம், கதிர்காமம் என்றெல்லாம் போனோம். போகும்போது பெற்றோரையும் அழைத்துப்போனோம். எம் முன்னோர்கள் சிலர் வருடமொருமுறை சிதம்பரம்போய்க் திருவாதிரை காண்பர், காசியாத்திரை மேற்கொள்வர். இப்போ பொருள்வளமும், போக்குவரத்துவசதியும் இருப்பதாற் கன்னியாகுமரியில் இருந்து திருப்பதி காசிவரை யாத்திரை செய்கிறார்கள். ரமணமகரிஷி, அரவிந்தமகரிஷி, சிவானந்தர் போன்றவர்களைக் காணவும் போவர். இதேபோல இப்போ பகவான் சத்திய சாயிபாபாவிடமும் போகின்றனர்.

நாம்பிறந்த [redacted] தேசத்தினின்று இடம்மாறிப் புலம்பெயர்ந்த மக்கள், சிறப்பாக ஜேர்மனி,சுவிஸ், பிரான்ஸ், டென்மார்க், கொலண்ட், நோர்வே, இற்றாலி, கனடாபோன்ற தேசங்களில் வாழ்கின்றார்கள். தம் சைவப்பாரம்பரியம், பண்பாடு, நாகரீகங்களைப் பேணக் கோயில் அமைத்துள்ளனர். சில இடங்களில் அமைக்க முடியாவிடினும் வீட்டில் வழிபடுகிறார்கள். வையமெங்கும் வாழும் சைவர்கள் தெய்வம் தொழ வேண்டுமென்ற ஒளவ்வையின் ஞானதீட்சண்யம் எவ்வளவு மேன்மையானது.

இன்னமுதெனத் தேன்றி யோரைவர்
யாவரையும் மயக்க, நீவைத்த
முன்ன மாயமெல் லாம்முழுவேதரித்து, என்னையுன்
சின்னமும் திருமூர்த்தியும் சிந்தித்தேத்திக்
கைதொழ வேயரு ளெனக்கு
என்னம்மா! என் கண்ணா! இமையோர் தம்குலமுதலே
திருவாய்மொழி 7:1:8

> The benefits which a father should confer
> on his son is to give him precedence in the assembly of the learned. -67

# கடையிற் சுவாமிகள்

"ஞாலமதில் ஞானநிட்டை யுடையோருக்கு
நன்மையொடு தீமையிலை நாடுவதொன்றில்லை
சீலமிலைத் தவமில்லை விரதமோடாச்சிரமச்
செயலில்லைத் தியானமில்லைச் சித்தமலமில்லை.
கோலமிலைப் புலனில்லைக் கரணமில்லைக்
குணமில்லைக் குறியில்லைக் குலமுமில்லைப்
பாலருடன் உன்மத்தர் பிசாசர் குணமருவிப்
பாடலினோடாடலிலைப் பயின்றிடினும் பயில்வர்"

இப்பாடல் தரும் இலக்கணத்திற்கு இணையற்ற இலக்கியமாய் வாழ்ந்தவர் எங்கள் கடையிற் சுவாமிகள். அவரது பெருமையைத் தனது அடியார் சிலருக்கு விளக்கும் போது ஸ்ரீ யோக சுவாமிகள்கூறிய அரிய பெரிய வாக்கு இவ்விடத்தில் சிந்தனைக் கெட்டுகிறது. "ஆடையற்ற மாதொருத்தியுடன் கைகோத்து ஆடினாலும், தன் சொருப நிலையிலிருந்து தளம்பாத தனிப் பெருந் தவத்தோன் அவர். புத்தர், கிறிஸ்து முதலாயினோரிலும் பன்மடங்கு பெரியவர்" ஆவர். என்பது அப்பொன்னுரை.

அவர் தமக்கு உறைவிடமாகக் கொண்டு உகந்த பெரிய கடைச் சதுக்கம்-பொதுச்சொத்து. அதின் மேற்கு வடக்கு வீதிகளில் இருந்த வியாபார நிலையங்கள் பெரும்பாலும் வாணிபச் செட்டியார்களுக்குச் சொந்தமாயிருந்தன. அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் இயல்பாகவே தெய்வபக்தியிலும், அடியார்சேவையிலும் ஆர்வமுள்ளவர்கள். அவர்களில் சிலரே சுவாமியின் மகிமையை முதலில் அறிந்து கொண்டனர். முதன் முதலாகச் சுவாமிகள் வீடு தேடிச் சென்று கேட்டருந்தியது, திரு. வைரமுத்துச் செட்டியார் மனையிலாகும். இவர் ஒரு பழைய தொண்டர். இவரின் குரு பக்தியின் சின்னமாகப் பின்னாளில் தோன்றியதே கந்தர் மட அன்ன சத்திரம். சுவாமிகளைக் குழந்தையாகப் பாவித்து அவருக்கு அன்னம் குழைத்து ஊட்டிய சின்னாச்சிப் பிள்ளை அம்மையார், ஸ்ரீ அருளம்பல சுவாமிகளின் தாயார் ஆவார். அம்மையாரின் கடைக்குட்டியான அருளம்பலம் மூன்று வயதுப் பாலகனாகச் சுவாமிக்கருகிலிருந்து, அவர் உண்ணும்போது பங்கெடுப்பதுண்டாம். இற்றைக்கு ஐம்பது வருஷங்களுக்கு முன் அருளம்பல அடிகள் சில அன்பர்களுக்கும் எமக்கும் நேரிற் சொன்ன விடயமிது. எவ்வளவு அன்பாகத்தான் அடியார்கள் அவரை ஆதரித்து அமுது வழங்கிய போதிலும் மறுபடியும் அதே இல்லங்களுக்குச் செல்வது அவர் வழக்கில் இல்லை.

தம்மையடைந்த மெய்யடியாரிடையே சாதிபேதம், உயர்வு தாழ்வு , செல்வர் வறியவர் என்ற வித்தியாசம் பாராது எல்லோருக்கும் ஒரேவிதக் கருணை காட்டி அவர்களது உடல் நோய்க்கும், மன நோய்க்கும், வறுமைக்கும் பரிகாரஞ்செய்வதில் அநுக்கிரகங் காட்டத் தொடங்கவே, அடியார் கூட்டம் பெருகியது. ஏழைகளின் இல்லங்கட்கும் எழுந்தருளுமாறு அழைப்புகள் அதிகரித்தன. அதற்கிணங்கச் சென்ற போதெல்லாம், அவர்கள் அவருக்குத் தாம் வழக்கமாகப் பாவிக்கும் மற்ச மாமிச மதுச்சேர்ந்த விருந்தையே அளித்தனர். விருப்பு வெறுப்பற்றவரான சுவாமிகள் அவற்றையும் ஏற்றனர். தனக்கென ஓர் செயலற்றுத் தானதுவாய் நின்ற அருட்பெரியோரின் இந்த முறை வைதீகச் சைவர்களிடையே குரோதத்தையும் விஷமத்தையும் ஏற்படுத்தியது. அவர்களையும் அப்பன் தடுத்தாட்கொண்ட முறை அற்புதத்தின் அற்புதமாகும். உதாரணமாக இணுவில் ஆசிரியர் அம்பிகை பாகனின் மனமாற்றத்தைக் குறிப்பிடலாம். அத்தொடர்பில், ஸ்ரீ யோக சுவாமிகள் எமக்குக் கூறிய ஓர் அருஞ் சம்பவத்தை மாத்திரம் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

கடையிற் சுவாமிகளின் உத்தம சீடர்களுள் ஒருவரும், யோகரின் குருநாதருமான, நல்லூர்ச் செல்லப்பச் சுவாமிகளுக்கே தமது குருநாதன் மதுபானம் அருந்துகிறார் என்பதைப் பிறர் சொல்லக் கேட்கச் சகிக்கவில்லையாம். அது அவரால் நம்பமுடியாத விஷயமாகவும் இருந்ததாம். நேரே பரீட்சிக்கக் கருதி ஒரு

18ம் பக்கம் பார்க்க

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்உயிர்க்கு எல்லாம் இனிது**
தம்மைவிட மிகுதியாகத் தம்மக்கள் கல்வியறிவுடையவராக இருத்தல்
(பெற்றோராகிய தமக்கு மட்டுமன்றி) இப்பேருலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் இன்பம் தருவதாகும். -68

# நவராத்திரி

செ. நவநீதகுமார்

சத்தி பின்னமிலான் எங்கள் பிரான் என்பது திருவருட் பயன். சத்தி என்பது செயற்படுவதைக் குறிக்கும். இறைவன் எவ்வண்ணம் இருக்கின்றானோ அவ்வண்ணம் சத்தியும் நிற்பாள்.

சத்தியாய் விந்துசத்தியாய் மனோன்மனிதானாகி
ஒத்துறு மகேசையாகி உமை திருவாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக் கிங்ஙன் வருஞ்சத்தியொருத்தியாகு
மெத்திற நின்றானீசன் அத்திற மவளும் நிற்பாள்.

என்பது சிவஞானசித்தியார்.

பராசத்தி பிரமனிடத்திற் சிருஷ்டி சத்தி பிராமியாகவும் விஷ்ணுவிடத்து, திதி சத்தி வைஷ்ணவியாகவும் உருத்திரனிடத்து. சம்கார சத்தி உமையாகவும் உள்ளாள்.

அகில உலகையும் ஆக்கியும், காத்தும், அழித்தும் அருள் புரியும் சத்திக்கு உரிய விரதங்கள் மூன்றாகும். அவையாவன சுக்கிரவாரம், ஐப்பசி உத்தரம், நவராத்திரி என்பனவாகும்.

நவராத்திரி ருதுவிற் கொன்றாகக் கொண்டாடப்படும் என்று சொல்வாருளர். ஆனால் இரண்டு காலப் பகுதியிற் கொண்டாடுவதே இப்போதைய வழக்கமாகி யுள்ளது. ஒன்று, வசந்தருவாகிய சித்திரை மாதம் சுக்கிலபட்சப் பிரதமை முதல் நவமியீறாக உள்ள ஒன்பது தினங்கள் அனுட்டிப்பது. இரண்டாவது சரருதுவாகிய புரட்டாதி மாதத்தில் அனுட்டிக்கப்படுவது. புரட்டாதி மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் நவமிவரையுள்ள ஒன்பது நாள்களில் நவராத்திரி விரதம் அனுட்டிக்கப்படும். இக்காலத்தில் இறைவியைக் கும்பத்திலும் விம்பத்திலும் ஆவாகனம் பண்ணிப் பூசனை புரிந்து வழிபடல் வேண்டும்.

முதல் எட்டு நாட்களும் ஒரு பொழுது உண்டு ஒன்பதாம் நாள் நவமியன்று உபவாசம் இருப்பது உத்தமம். இக்காலங்களில் அபிராமி அந்தாதி, சகலகலாவல்லி மாலை, போன்ற தோத்திரங்களைப் பாராயணம் செய்யலாம். முதல் மூன்று நாளும் வீரம் வேண்டித் துர்க்கா தேவியைப் பூசிப்பர். இதனாற் பயநாசம் உண்டாகும். நான்காம், ஐந்தாம், ஆறாம் நாள்கள் இலக்குமி தேவியை பூசிப்பர். இதனால் தனம், தானியம், சுவர்ணம் முதலியன விருத்தியாகிச்செல்வச் செழிப்புண்டாகும்.

இறுதி மூன்று நாளும் கலைகளுக்கு அதிபதியான சரஸ்வதியைப் பூசிப்பர். இதனால் வித்தை, கல்வி, தொழில் என்பன விருத்தியாகும். இதில் வரும் நவமி மகாநவமி எனப்படும். இதனால் நவராத்திரி மகா நோன்பு எனப்படும். இக்காலத்தில் வடை,அவல், தேன்குழல், கற்கண்டு,எள்ளுருண்டை முதலியவற்றை நிவேதித்துக்,கோங்கு,மகிழ் ஆகிய மலர்களால் அம்பாளைப் பூசிக்க வேண்டும்.

இறுதிநாளான பத்தாம் நாள் விஜயதசமியாகும். இத்தினத்தில் அம்பாள் மகிடாசுரனைச் சம்காரம் செய்தாள். மகிடம் என்பது எருமை; அதாவது விட்டுக் கொடுக்காத, விலகி நடவாத தன்மைகளை யுடையது எருமை. எம்மிலும் அப்படியானகுணம் உண்டு. இக்காலத்தில் விரதமிருந்து மிருகத்தனமான குணங்களை அம்பாள் அனுக்கிரகத்தால் அழித்து ஞான நிலையை அடையும் தன்மையைக் குறிக்கும்.

மகிடாசுரசம்காரத்தை நினைவு படுத்தும் வகையில் ஆலயங்களிற் கன்னிவாழை வெட்டுதல் ஆகிய மானம்புத்திருவிழா நிகழ்கிறது. பாண்டவர்கள் அஞ்ஞாதவாச காலத்தில் ஆயுதங்களை ஒரு வன்னிமரப் பொந்தில் ஒளித்து வைத்திருந்தனர். அஞ்ஞாதவாசம் முடிந்ததும்

It is pleasant to all the powerful creatures of the great earth
that their children should possess more knowledge than themselves. -68

தமது ஆயுதங்களை எடுத்து, வன்னி மரத்தை வாளால் வெட்டிவிட்டனர். இத்தினம் விஜய தசமியாகும். வித்தைகள் ஆரம்பிப்பதற்கு இத்தினம் ஏற்ற தினமாகும்.

நவராத்திரி காலங்களில் ஒருவயது முதல் ஒன்பது வயது வரையுள்ள பெண்பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்து, முதல் நாள் ஒருவயதுடைய வரையும் இரண்டாம் நாள் இரண்டு வயதுடையவரையும், இப்படியே ஒன்பது நாள்களும் ஒன்பது பெண்குழந்தை களையும் பூசை செய்து, அவர்களுக்கு உபசாரம் செய்து, கன்னி வழிபாடு செய்வது சிறப்பானதாகும். நவராத்திரி காலங்களில் இறைவி மகேஸ்வரி,வைணவி, கௌமாரி, வராகி, மகாலக்குமி, இந்திராணி, பிராமி, நரசிம்மி, சாமுண்டி ஆகிய நவசத்திகளாகி அருள் புரிகின்றாள்.

சுகேதன் என்னும் அரசன் தன் பகைவர்களால் நாடு, நகரை இழந்து காட்டில் இருந்தான். கவலையுடன் இருந்த சுகேதன் ஆங்கீரச முனிவரைச் சந்தித்துத் தன் துயரத்தைக் கூறினான். முனிவர் நவராத்திரி விரதத்தின் பெருமையை எடுத்துரைத்து அவ்விரதத்தை அனுட்டிக்குமாறு கூறினார்.சுகேதன் நவராத்திரி விரதத்தை முறையாக அனுட்டித்து அம்பிகை அருளினால் இழந்த அரசுரிமையை மீண்டும் பெற்று நல்வாழ்வு பெற்றான்.

சீதாப்பிராட்டியை இழந்த இராமபிரான் கிட்கிந்தையில் கவலையுடன் இருந்தார். அங்கு வந்த நாரத மகரிஷி இராமபிரானிடம் நவராத்திரி மகிமைபற்றிக் கூறினார். இராமபிரான் நாரதர் உதவியுடன் நவராத்திரி விரதம் நோற்றார். இதனால் அம்பிகையின் அருள் பெற்று இராவணனை ஜெயித்துச் சீதையைச் சிறை மீட்டார். ஆலயங்கள், பாடசாலைகள், வீடுகள், வர்த்தக, தொழில் நிறுவனங்கள், போன்ற இட்களிலெல்லாம் நவராத்திரி சிறப்பாகச் கொண்டாடப்படுகின்றது.

16ம் பக்கத் தொடர்ச்சி

போத்தல் சாராயத்துடன் குருநாதரைத் தேடிப் பெரிய கடை சென்றார். போத்தலைச் சால்வையில் சுற்றி மறைத்துக் கொண்டு அருகில் உட்கார்ந்ததும், ஓகோ! நீயும் எனக்குச் சாராய விருந்தளிக்க விரும்பிவிட்டாயா? சரி பின்னாலே மறைத்து வைத்திருக்கும் சாராயப் போத்தலை எடுத்துத் திற. நீயும் நானும் இங்கிருக்கும் அன்பாகளும் பகிர்ந்து குடிப்போம். என்றாராம். நடுக்கத்துடன் செல்லப்பாச் சுவாமிகள் போத்தலை முன்வைத்துத் திறந்ததுமே, திராவகம் முழுதும் ஆவியாக மாறிக் காற்றோடு கலந்துவிட்டதாம். சீடர் குருநாதரின் பாதங்களை இறுகப் பிடித்துக் கண்ணீரால் கழுவிவிட்டு நல்லூர்த் தேரடிக்குத் திரும்பிவிட்டாராம்.

இது போன்ற அற்புத நிகழ்ச்சிகள் அளப்பில. அவரது ஊன் எச்சிலை உண்டு நோய் தீர்த்தோர் பலர். சித்திகள் பெற்றோர் சிலருமுண்டு. சுதுமலையைச் சேர்ந்த ஒருவர் சோதிட வல்லுனரானார். இன்னொருவர் புகழ்பெற்ற வைத்தியரானார். மீன் பிடிக்கப் போயிருந்த கரையூர் வாசியான சுவாமிகளது அடியார் ஒருவர், நடுநிசியில் புயல் காற்றினாலும், பெருமழையினாலும் தாக்கப்பட்டு ஆழ்கடலில் அமிழ்ந்திப் போகும் வேளையில் வேறு தஞ்சமின்றி, கருணை மலையான சுவாமிகளை சிந்தித்து அலறவே, உடனே அப்பக்தனது குடிசைக்குச் சென்று சவளக் கோல் ஒன்றை எடுத்து ஏலேலோப் பாடி முற்றத்து மண்ணைக் கிளறி, அந்தப் பக்தனது உயிரைக் காப்பாற்றின அருட்கதை கேட்போர் உள்ளத்தை உருக்குந் தரத்தது. இவ்விதம் முப்பது ஆண்டளவு யாழ்ப்பாண மக்களுக்கு அல்லல் களைந்து, அளப்பரும் அத்யாத்ம வழிகாட்டி, ஞான குரு வித்திட்ட இந்த மகானுபவர் கரவருடம், புரட்டாசி மாசத்தில், பூரணையும் பூரட்டாதி நட்சத்திரமும் பொருந்திய புண்ணிய வேளையில் மகாசமாதியடைந்தனர். சுவாமிகளுடைய சமாதிக்கோயில் வண்ணார்பண்ணை நீராவியடியில் உள்ளது.

நன்றி - சமரச ஞானக்கோவை.

**ஈன்ற பொழுதிற் பெரிதுஉவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்**

தன் மகனைக் கல்வி கேள்விகளால் நிறைந்தவன் என்று அறிவுடையோர் சொல்லக்கேட்ட தாய், தான் அவனைப் பெற்றெடுத்த பொழுதைவிடப் பெரிது மகிழ்வாள். 69

# வாயிலார் நாயனார்

சிவ - சண்முகவடிவேல்

திருமயிலாபுரி தொண்டை நாட்டிலுள்ளது. நூல்களில் புகழ்ந்து பாடும் சொற்கள் விளங்கும் நோன்மையது. மயிலாபுரி வளம் மிகுந்தது. வாய்மையில் சிறந்தது, ஒழுக்கத்தில் உயர்ந்தது. பெருங்குடிகள் நிலைத்திருப்பது. வழிவழியாகத் தொடர்ந்து வரும் செலவம் நிறைந்தது.

ஆழ்கடல் தன்னிடமுள்ள மணி, முத்து, இரத்தினம், சங்கு போன்ற திரவியங்களைப் பாதுகாத்து வைப்பதற்கு மரக்கலங்களைக் கொண்டது. மரக்கலங்களாகிய பண்டாரங்களில் கடல்படு திரவியங்கள் சேம வைப்பாகத் திகழும். அப்பதி ஆடும் அழகிய கொடிகளைக் கொண்டது. மரங்கலங்களாகிய சிமிழினால் கடல் செல்வத்தைக் கரைக்குத்தள்ளும்

நீடு வேலைதன் பானிதி வைத்திடத்
தேடு மப்பெருஞ் சேமவைப் பாமென
ஆடு பூங்கொடி மாளிகை அப்பதி
மாடு தள்ளு மரக்கலச் செப்பினார்
(2)

கடற்கரைக் கானலின் பரந்த இடம் எங்கும் ஒலிக்கின்ற தெளிந்த அலைகள், அங்கு மரக்கலங்களின்றும் இறக்கிய யானைக் கன்றுகள் உலாவும். முத்துக்களைக் கொழித்து ஒதுக்கும் கடலிற் படிந்து மேகங்கள் அணையும். செழிப்புடைய எருமைக் கன்றுகளும் எங்கும் உலாவித்திரிவன. யாவும் கருமையும் வனப்பும் உள்ளனவாதலின் பிரித்து வேற்றுமை அறிய ஒண்ணாதனவாகும்.

மயிலாபுரியில் மாளிகைகள் வெண்ணிறம் உடையன. சாலைகளில் சார்வாகக் கொடிகள் அசைந்து ஆடும். தூயவெண்மதி மிடையும் கொடிகளினுள் நுழைந்து அணையும்.

அக்காட்சி பவளவாய்ப் பெண்களுடைய முகங்களைப் பார்த்துப் பயந்து மறைவிடம் புக்குப் பதுங்குவது போலாகும்.

திருவிழாக்களின் அலங்கார ஆரவாரம் வீதிகள் எங்கும் ஆடவரின் தூதாகப் பறந்து திரிவன போல வண்டுகள் காரிகையார்களின் கூந்தல் எங்கும் அணியப்படும், சிவசெல்வங்கள் எங்கும் எங்கும் ... வெண்சாந்து அலங்கரிக்கப் பெற்ற மாடங்கள் எங்கும் ....

தொன்மையில் மக்கது சூத்திரர் தொல்குலம். வேளாளர் என்னும் அக்குலம் சிறந்த நலம்பெற வாயிலார் என்னும் தபோதனர் வந்து அவதரித்தனர்.

வாயிலார், வாயிலார் என்னும் பழங்குடிக்கு முதல்வராக விளங்கினார். சிவதொண்டின் விருப்புடையார். சிவபெருமானிடத்திலும் மிக்க அனிபுடையராவார்.

வாயிலார் சிவபெருமானுக்கு மறவாமையால் மனக்கோயில் ஆக்கினார், நெஞ்சில் பெருமானை நிலையாக அமைத்தார். உமையொருபாகரை உள்ளே உணரும் ஞான ஒளி வீசும் சுடர் விளக்கு ஏற்றினார். அழிவில்லாத ஆனந்த நீரினால் திருமஞ்சனம்

The mother who hears her son called 'a wise man"
will rejoice more than she did at his birth. -69

ஆட்டினார். அறவாணருக்கு அன்பு என்னும் அமுது அளித்தார். நாளும் அர்ச்சனை புரிந்தார். இதனை

மறவாமை யானமைத்த மனக்கோயி
லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரு மொளிவிளக்குச்
சுடரேற்றி
இறவாத வானந்த மெனுந்திருமஞ்
சனமாட்டி
அறவாணாக் கன்பென்னு மமுதமைத்தர்ச்
சனைசெய்வார்
-(௪)

என்று சேவையர் காவலர் செந்தமிழ் செப்பும். இதனோடு திருநாவுக்கரசு நாயனாருடைய நாலாம் திருமுறையில் வரும்

காயமே கோயில் ஆகக் கடிமனம்
அடிமை யாக
வாய்மையே தூய்மை ஆக மனமணி
இலிங்கம் ஆக
நேயமே நெய்யும் பாலா நிறையநீர்
அமைய ஆட்டி
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக்
காட்டி னோமே.

என்னும் பாமலரைப் பக்தியோடு பரவிப்பணிந்து வரச்சித்தம். பழுத்து முத்திக்கு வித்தாகி முளை கொள்ளும். வாயிலார் அகத்தில் அண்ணலாருக்கு அன்பு நிறைந்த வழிபாட்டினை நெடுநாடகள் நிகழ்த்தினார். சிவபெருமானுடைய திருவடிநீழலின் கீழே புகலடைந்தார் - புண்ணிய மெய்த் தொண்டனார் - என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் ஒன்று காதலித்த வாயிலார் நனறு தொழுது நன்கு அமர்ந்திருந்தார்.

## சைவநீதி - சந்தா விபரம்

| தனிப்பிரதி | | வருடச்சந்தா | |
|---|---|---|---|
| இலங்கையில் | - ரூபா 25.00 | இலங்கையில் | - ரூபா 250.00 |
| இந்தியாவில் | - ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்பு பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்படவேண்டிய முகவரி :-

**C. NAVANEETHAKUMAR,**
42, Janaki Lane,
Colombo -04,
Sri Lanka

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் 70

# THE GREAT TEMPLE AND THE SHRI THEIVAYANAI AMMAN TEMPLE AT KATARAGAMA

A PILGRIM.

As you circumambulate the Great Temple at Kathiragmmam dedicated to Kandaswamy from left to right which is the traditional way,after the completion of the worship in the inner Sanctum of the Great Temple,and arrive at the U turn on the right there is an archway which leads to the Shri Theivayanai Amman Temple. On the road outside facing the two Temples are the two gateways leading to each temple. From the gates leading to the Shri Theivayanai Amman Temple, you can proceed through the same Archway to the Great Temple. This is the physical layout of the Temples which conveys a deeper spiritual meaning. The worship of the Lord at the Great Temple(leads to Gnana Shakthi,the power of wisdom and knowledge.)which in turn leads to the power of Kriya Shakthi(the energy of action)embodied in the form of Shri Theivayanai Amman and the worship of Shri Theivayanai Amman at her Temple,leads one to the Power of Gnana Shakthi at the Great temple.

In legend and myth Theivayanai Amman,the daughter of Indra(Monarch of the Celestials) was the wife of the great Lord Kandaswami,who later married Valli Amman the daughter of a Veddah Chieftain in Kataragama, Sri Lanka. The spiritual essence of Valliamman is Ichcha Shakthi,the energy of desire.

Within the premises of the Shri Theivayanai Amman Temple is situated at the centre of a shrine dedicated to the Shri Teivayanai Amman. Beyond the Portrait of Shri Theivayanai Amman at the inner entrance to the Shrineis a massive door leading to the Sanctum sanctorum of the Temple. Only the Priests who perform the poojas have access to the sanctum sanctorum. But on one night of the year immediately before the day of the theertham (The water cutting ceremony) which is the ceremony that concludes the Maha Festival in July, the sanctum sanctorum is opened to the devotees.The Brahmin Priests sit before the image of Shri Theivayanai Ambal whose eyes pierce through the body of the worshippers and reach into the inner recesses of their souls. Offerings are made by the devotees and the Priest gives the blessings of Ambal by adorning the foreheads of the devotees with Kumkumam. On the right of Ambal is the image of Shiva and on the left is the image of Vishnu. Two other Brahmin Priests sit before these images and after the devotees pay their respects and give offerings the Priest sitting at the feet of Shiva adorns the foreheads of the worshippers with Holy Ash and the Priest sitting at the feet of Vishnu places Santhanam on the foreheads of the worshippers.This ceremony on this night is called "The Ambal Darishanam".

Beyond the outer Mandapam of the temple ends, is the building called the "Guru Asanam"(The Repose of Gurus),which is so constructed that it appears to be an extension of the Temple. This is an ancient building of stark simplicity befitting the Spartan asceticism of the Sannyasins of the Sankaracharya Order of Monks called the Dasanamis who had been the Trustees of the Temples.The Trustees lived in a room in the building.In the Hall in the middle is a portrait of Shri Kesapuri Swamy and below this portrait are smaller photographs of the last two Trustees,Swamy Ramagiri and after, Swamy Dattaramagiri. At the foot of these are a pair of wooden clogs (used by Swamy Kesapuri) and sacred books covered with a red cloth. The floor below is of dried cow dung, and the Omam [The sacred fire] is kept burning on this floor, On the walls of the hall are hung the old photographs of the Swamis whose matted locks and beards and ash smeared bodies indicate their dedication to a life of asceticism and prayer at this holy site.

The rear compound is a flower garden. The small white flowers of the Nandiawattai Plant [the

Gardenia] and the Queen of the Night are collected each day and used for the worship of Ambal and Palani Andavar.The Tulasi Plant is also grown here.

The rear compound of the Guru Asanam also contains the Samadhis of KesapuriSwamy,and the other trustees of the Trust, Mangalapuri, Surajpuri, Narayanapuri, Sukirthapuri ,Ratnapuri,and Ganeshagiri. Between the two of the Samadhis is the tomb of Balasundari,the daughter of an Indian Rajah who in fulfilment of a vow to Kandaswami dedicated his first born Balasundari to service for Kandaswamy.

A flame is kept burning at the Samadhi of Kesapuri Swamy and after poojas are performed to Ambal the coiling smokes of the incense in the braziers and the lights flickering from the brass bowls of camphor are also taken by the Priest to the tomb of the Kesapuri by the Priest who continues the worship at the Samadhi.

The Palani Andavar Temple is situated at the left of the Shri Theivayanai Amman Temple and the Temple of Vairavar the Guardian Deity of the site is at the entrance to the Great Temple from the Amman Temple.

The quarters of the the Priests and Employees are on the Right. Behind is the kitchen. Adjoining the kitchen is a spacious dining hall which has been renovated by the Administration after the departure of Swamy Dattaramgiri to India in 1994. The Dining Hall has been paved with glossy floor tiles and roofed with Metroof Sheets. Pilgrims are seated on the floor and vegetarian meals are served, during the 15 days of the Festivals in July.

About ten thousand people a day are given lunch and dinner. Large Tapestries of Shri Theivayanai Amman and Pillaiyar hung on opposite sides of the hall overlook the Pilgrims at the Annadanam with their benevolent gaze and remind the Devotees that it is through the munificence of Ambal and Pillaiyar that the meals are being provided.

Kalyanagiri an Ascetic came over to Kataragama from India and performed severe penances and austerities at the banks of the Menik Ganga in order that he might be worthy of an audience with the God. During this period a little Veddah boy and girl attended to his needs.On the 12th year of his austerities he fell asleep and was woken by the Veddah boy and girl. Infuriated he chased the children shouting out that they had dared to wake him at the time he had fallen asleep for the first time. The children ran laughing and after clambering on a rock in the Ganga transformed themselves into the tender Lord Murugan and Valli. The awestruck Kalyanagiri prostrated himself at their feet and worshipped and the Lord and Valli blessed Kalyanagiri and on their divine instructions he engraved the mystic diagram [the Yantra] which is kept in the innermost recesses of the Great Temple. This Yantra represents the Uththama Rahasyam [the ultimate secret of the Divinity who cannot be comprehended except by his Grace]. This story is a beautiful parable conveying the meaning that the Lord and his consort Valli unknown to the devotee attends to the needs of the devotee and looks after him. Kalyanagiri resided at Kataragama and was the first Trustee of the Shri Theivayanai Amman Temple Trust.When Kalyanagiri passed away his earthly body was transformed into a Muthu Lingam [Lingam of Pearl] and a shrine was constructed over it and called the Muthulinga Swami Kovil which at one time belonged to the Shri Theivayanai Amman Trust.

The next Trustee was Jayasingiri pupil of Kalyanagiri, who received the Governor Brownrigg at Kataragama. He was succeeded by Mangalapuri who died on or about the year 1873. Kesapuri who had been the pupil of Mangalapuri for 70 years succeeded him. Kesapuri executed the Deed of Trust No. 2317 of the 9th March 1898. This Deed recognised the existence of this long standing Trust and set out that the Trustees should be Sannyasin of the Order of Dasanamis founded by Sankaracharya belonging to one of the ten sects called Giri, Puri, Bharati, Sarasvati, Van,Arnaya,Parvat, Asram, Tirtha, Barath TIrtha.

The succeeeding trustees were Surajpuri, Narayanapuri, Santhosapuri, Ratnapuri, Ganeshagiri, Ramagiri,and Dattaramagiri. The

pressent Trustee is Purna AnandaGiri. The names of all the Trustees indicate that they were of the Order of Sannyasins mentioned in the Deed of Trust.

The Ganesha Temple situated next to the Great Temple belongs to and is administered by the Shri Theivayanai Amman Temple Trust. The religious tradition that worship should commence first before the Shrine of Ganesha,before the worship is performed at any other shrine is faithfully followed at Kataragama. Before worship begins at the great temple,the temple bell at the Ganesha Temple is pealed,and the Brahmin Priests perform the worship at this Temple. Then the worship at the Great Temple is performed by the Kapuralas. After this worhip,worship at the Palani Andavar Temple at the Theivayanai Amman Temple commences,followed by the worship at the Shri Theivayanai Amman Kovil.The last Pooja is performed at the Vairavar Shrine.

The Romance of the Great Lord and Valli,the Veddah Princess and the nuptials of the Great Lord Kandaswamy, is a living tradition followed each year.On the day of the New Year in April there is a procession from the Great Temple about 300 meters away to make the proposal of marriage and finalise the Nuptials of the Great Lord to Valli.

The Nuptials are celebrated on the 15th day Festival in July and ends on the day of the Thiruvona Nadchathiram, which is the day of the Theertham(the water Cutting Ceremony). The exact time of the commencement of the festival is a secret known only to the Kapuralas,the Priests of the Great Temple.

The festival commences at dusk with all the reverence and munificence the Temple Authorities can offer for the Divine Nuptials. Richly caprisoned elephants led by a magnificent Tusker chosen to carry the Sacred Casket enter the Temple premises their bodies swaying and waving thier trunks.Troops of drummers and musicians and dancers enter and take their positons. A retinue of Torch Bearers clad in ancient livery hold aloft encased atop iron poles burning copra which crackle and flame keeping out the encroaching darkness of the night.There is an expectant hush as the Pilgrims turn their gaze towards the main gates of the Temple. At the stipulated time the Basanayake Nilame clad in the regalia of a Kandyan Chieftian, but sans shoes and wearing white cloaks and his retinue walk into the Temple to the accompaniment of drums and flutes.The Nilame makes obeisance at the Great Temple, the Ganesha Temple and the Vishnu Temple which adjoin the Ganesha Temple. The casket containing the mystic Yantra covered by a cloth of rich tapestry is taken reverently by the Kapuralas. The drums throb to a measured beat keeping time with the rhythmn of the flutes as the casket is carried out and secured on the Tusker Elephant. Garlands of fragrant flowers are arranged in a bower around the casket and a Kapurala sits astride the Elephant with his arms fastened around the casket. As the Elephant wheels round to take its first steps to go round the Temple Premises the Trustee of the Shri Theivayanai Amman Temple who holds a coconut with camphor burning on it,raises the coconut above his head in salutation to the Great one and dashes the coconut to smithereens at his feet to indicate the blessings of the Elder Brother Ganesha to the ensuing Nuptials.The Elephant pauses before the Ganesha Temple and for about 15 minutes the Rajah Pooja is performed by the Trustee. Holy Ash is placed on the foreheads of the Mahouts and the Kapuralas and the forehead of the Elephant is adorned by the Trustee with Holy Ash, Santhanam and Kumkumam. The Tusker extends its trunk inviting the reward of fruits. The Trustee places sugarcane and a bunch of plantains into the mouth of the Tusker who chops on it lazily,flopping its massive ears.

The worship then commences with braziers containing incense of sweet breath coiling upwards in a slow hazy smoke being waved by the Trustee in the outlines of the mystic word "OM".This is followed by the waving of Camphor in polished bowls

of brass towards the casket at the top of the Tusker. A bell is tinkled incessantly by the Trustee during this period. The devotees fling petals and spray rose water upwards towards the casket.The Tusker is impervious to the lights and thronging crowds and stands patiently coiling and uncoiling his trunk searching for fallen petals at his feet and shifting his his feet from side to side.

Once the Rajah Pooja has been completed the Tusker takes the first step forward.Immediately the drums beat,the flutes pipe music,the Kandyan dancers swirl and twirl in vigorus dance,the lissom maidens wave their hands and move thier feet in a graceful formations, the nimble youth leap and move with quick movements to the rhythmn of the flutes and the pounding of drums. Happiness illumines their faces and sparkles through their eyes. Behind the Tusker walk groups of devotees chanting Thevarams [devotional songs]

The procession winds its way round the Temple and out of the Main gates towards the Temple of Valli,pausing briefly at the shrines on the way for the priests of each shrine to felicitate the Lord. The thrill of the Divine touches the hearts of the thronging devotees on the sidewalks who lift their hands in prayer with cries of Haro-Hara and Sadhu-Sadhu. Divinity is in the air like the gentle breeze that springs caressing the leaves of the trees.

The Trustee of the Shri Theivayanai Amman Temple has now arrived at the Valli Amman Temple. When the Tusker arrives and the shrouded casket is taken out, the Trustee performs the Aalathi [the traditional way of greeting the Bridegroom as he enters the residence of the Bride] by waving camphor gracefully before the Casket as it is taken reverently by the Kapuralas in to the inner Sactum Sanctorum of the Valli Amman Temple. The devotees worship the eternal Bridegroom and Bride at the Temple. After the Pooja at the Temple, the shrouded casket is taken out, mounted on the Tusker and the procession wends its way back to the Great Temple. The same ceremony is performed every night of the festival ,but on the penultimate night [the night of the Ambal Darishanam] the resplendent. Full moon gazes down through the tree tops and showers its silver luminiscence on the procession.

Who gives the patience to the elephants,the energy to the drummers,the flutists,the graceful maidens the nimble youth performing the dances untiringly during the period of the three hours of the procession, the happiness on their faces,the rapture on the faces of the devotees? Who looks on this procession and showers more than he gives? You will know the Answer.

The Final Day is the Theertham (the Water Cutting Ceremony) which is on the Thirvonam Nadchathiram. The casket is taken out at the time determined by the Kapuralas covered with dried palm leaves and taken down to the Menik Ganga to a specially constructed bower of branches and leaves to the accompaniment of the thunderous beating of drums,the resounding sound of flutes, the vigourous pounding of feet of the Kavadi dancers.Thronging crowds of thousands rush frenziedly up the river following the casket. As soon as the casket is dipped in the bower ,and taken out the devotees rush to the bower pluck out the leaves and collect the waterto be taken and placed in their shrines at home. Devotees splash water on each other and fling themselves into the river. Happiness fills the air. The pilgrims then depart to their homes with the inner glow that their pilgrimmage has been rewarded.

During the month of November each year on Thiru Karthikai Nadchathiram day,the birthday of the Great Lord is celebrated with a procession of similar pomp and pagentry.

This is followed by the Kanda Sashti (6 days of fasting and prayer) by pilgrims at the Shri Theivayanai Amman Temple to commemorate the war of the Great Lord against the Asuras which ended on the 6th day of the fast with the rout of the Asuras.

The Great Lord thus lives in Kataragama with his consorts Theivayanai Amman and Valli Amman and the Theivayanai Temple is an indispensable part of this heritage.

# கணபாலன் அவதரித்த கதை

தொகுப்பாக்கம் பேராசிரியர் சக்திவேல

கணபதி யாருடைய புதல்வர்? அவருக்கு இத்தனை மகத்துவம் எப்படி ஏற்பட்டது? சிவபெருமான் முதலிய பெருந்தேவர்களுடன் அவர் இருப்பானேன்? அதிலும் அவரை முற்படப் பூஜிப்பது ஏன்?

பர்வத ராஜனின் புதல்வியாக அவதரித்த பார்வதிதேவி, தன் தோழிகளாகிய ஜயை, விஜயை, என்பவர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் போது அத் தோழியர்களில் விஜயை என்பவள் பார்வதி தேவியைப் பார்த்து, 'அம்மா! சிவபெருமானுக்கு நந்தி, பிருங்கி முதலிய பிரமதகணங்கள் கணக்கின்றி இருக்கும் போது உங்களுக்கு கணங்கள் ஒருவரும் இல்லையே! அவர்கள் தான் நம் வாசலில் சிவாக்கினைப்படி காவல் செய்கிறார்கள். ஆகையால் அவர்கள் சிவபெருமானின் கட்டளையை ஏற்று நடப்பதைப் போல உங்கள் கட்டளையை ஏற்க மாட்டார்களாகையால் நமக்கென்று ஒரு சேவகன் இருந்தால் நல்லது' என்றாள். தோழியின் வார்த்தையைக் கேட்டதும் பார்வதி அதை இதவார்த்தையாகக் கொண்டாள், ஒருநாள் பார்வதி தேவியின், அந்தப்புரத்தில் நீராடிக் கொண்டிருக்கும் போது சதாசிவ மூர்த்தியான சிவபெருமான் அங்கு வந்தார். அவர் நந்திதேவரின் வார்த்தையை ஏற்றுக் கொள்ளாமல் உள்ளே சென்றார். உள்ளே வந்த அவரைக் கண்டதும் நீராடிக் கொண்டிருந்த பார்வதிதேவி நாணமடைந்து நெளிந்து சென்று தன் தோழி விஜயை கூறியது சரிதான் என்று நினைத்தாள். எனவே தனக்கு என்று யோக்கியமான சேவகன் ஒருவன் இருக்க வேண்டுவது அவசியம் என்றும் அவன் தன் கட்டளையின்றி அணுவைக்கூட தன் அந்தப்புரத்தில் அனுமதிக்கக்கூடாது என்று எண்ணினாள்.

இவ்வாறு தேவி யோசித்து தன் நாதனான சிவபெருமானின் திருவுருவைத் தியானித்து, அதுபோலவே பிரணவஸ்வ ரூபமும் யானைமுகமும் நான்கு தோள்களும் மூன்று கண்களும் மங்கள ரூபமும் உடையவராய் வெண்ணிற ஆடையுடுத்திய ஸர்வ வியாபியாய் விளங்கும் கணன் என்னும் புத்திரனை உரு வாக்கி, உயிர்கொடுத்து வாயிற்படியில் நிறுத்தி, 'நீ என் உத்தர வில்லாமல் ஒருவரையும் உள்ளே விடாதே' என்று கட்டளையிட்டு நல்ல ஆடைகளையும் ஆபரணங்களையும் கொடுத்து 'நீ



தீர்க்க ஆயுளுடையவனாக இருப்பாய். என்று ஆசீர்வதித்து, நீ என் பிரிய புத்திரன், என்று கூறினாள். உடனே உமாபுத்திரன் தன் தாயைப் பணிந்து, 'அம்மா! உனக்குள்ள பணிவிடைகளையெல்லாம் செய்கிறேன்.' என்றார். அதைக் கேட்டதும் பார்வதி 'நீ இப்பொழுது துவாரபாலகனாக இரு!' என்று ஒரு தண்டத்தைக் கொடுத்து மகிழ்ந்து, முகத்தில் முத்தமிட்டு அப்போது அணைத்து விட்டுத்தன் அந்தப்புரத்திற்குச் சென்றாள். அன்று முதல் கணதேவர் பார்வதியின் கட்டளைப்படித் திருவாயிலில் காவலிருந்து வரலானார்.

ஒரு நாள் உமாதேவி தன் தோழியருடன் நீராடிக் கொண்டிருக்கும்போது சிவபெருமான் பிரமதகணசகிதராய், தேவியின் அந்தப்புரத்திற்கு வந்து உள்ளே நுழைய முயன்றார். அப்போது வாயிற்படியில் காவலிருந்த கஜானனர் 'என் தாய் நீராடுவதால் உள்ளே போகக்கூடாது!' என்று சொல்லித் தடுத்துத்தண்டத்தைக்கையில் எடுத்துக் கொண்டார்.

அதைக் கண்டதும் சிவபெருமான் 'என்னை யாரென்று நினைத்தாய்? நானே சிவன்' என்று சொல்லி மீண்டும் நுழைய முயலும்போது கணபதி கோபித்துக் கையில் இருந்த தண்டாயுதத்தால் ஓரடியடித்து, 'சிவனாக இருந்தால் என்ன? இப்போது ஏன் மீண்டும் போகிறீர்?' என்று தடுத்தார். உடனே சிவபெருமான் கணபதியை நோக்கி, 'நீ என்னை அறிய மாட்டாய்! நீ மூர்க்கனாக இருக்கிறாய் உன்னை இங்கே அமர்த்தினவளுக்கு நான்

கணவன்!' என்று சொல்ல கணபதி மீண்டும் அடிக்க சிவபெருமான் கோபங்கொண்டு பிரமத கணங்களைக



கூவியழைத்து, 'இவன் யார்? இவன் 'துடுக்குத்தனத் தைப் பாருங்கள்' என்று சொன்னார். அப்போது பிரமதர்கள் துவாரபாலகராயிருக்கும் விநாயகரைப் பார்த்து, 'நீ யார்? நீ ஏன் இங்கு வந்தாய்? உன் வேலை என்ன?' என்று கேட்டார்கள் அதற்கு கணனே 'நீங்கள் யார்? இங்கே ஏன் வந்தீர்கள்? தூரப் போய் விடுங்கள்' என்று அதட்டினார். பிரமத கணங்கள் அவரைப் பார்த்துச் சிரித்து, 'இவன் யார்? பகைவனைப் போல கடின வார்த்தைகளைப் பேசுகிறானே!' என்று ஆலோசித்து மீண்டும் கணபதியைப் பார்த்து; 'அப்பனே! நாங்கள் சிவகணங்கள் சிவபெருமான் இட்ட கட்டளையைச் செய்பவர்கள். உன்னையும் எங்கள் கணத்தைச் சேர்ந்தவன் என்று எண்ணியிருந்தோம். இனி தூரச்செல். இங்கே இருந்தால் நாசமாவாய் என்று அதட்டினார்கள்.

அந்த மிரட்டலைப் பொருட்படுத்தாமல் யானை முகத்தார் வாயிலை விட்டு நகராமல் அங்கேயே இருந்தார். கணங்கள் சிவ பெருமானிடம் நடந்தவற்றைச் சொன்னார்கள் சிவபெருமான் அவர்களை நோக்கி, 'கணங்களே! நீங்கள் என்ன பேடிகளா? அவனைத் துரத்துங்கள்! என்றார்.

பிரமத கணங்கள் மீண்டும் வந்து 'கணனே! உன்னை வாயிற்படியில் காவல் வைத்தவர்கள் யார்? எங்களை மதிக்காமல் நீ பிழைப்பாயா? நரிக்கு சிங்காதனம் கிடைத்தது போலிருக்கிறது! நாங்கள் போர் செய்யும்முன் இங்கிருந்து ஓடிப்போய்விடு இல்லை யென்றால் மரிப்பாய்' என்று மிரட்டினார்கள். அதைக் கேட்டுக் கஜானனா கோபங்கொண்டு கையிலே தண்டாயதத்தைத் தாங்கி 'இங்கிருந்து தொலைவிற் செல்லுங்கள் நெருங்காதீர்கள். இங்கிருந்து போகாவிட்டால் என் பராக்கிரமத்தைக் காட்டுகிறேன் பாருங்கள்!' என்று சுழற்றி அடித்தார்.

இவ்விதம் கணநாதரால் அடிபட்ட சிவகணங்கள், 'இனி இந்தத் துவாரபாலகனை எதிர்த்தால் என்ன விளையுமோ?' என்று பயந்தவர்களாய்ச் சிவபெருமானிடம் விரைந்து சென்று 'பெருமானே! அவன் மிகவும் முரடனாக இருக்கிறான். எங்களை யெல்லாம் தண்டத்தால் புடைத்தான்!' என்று முறையிட்டுப் பணிந்து நின்றார்கள். சிவபெருமான், அவர்களைப் பார்த்து 'அவனோ ஒருவன்! நீங்களோ அநேகர்! ஒருவன் அடித்தான் என்று இத்தனை பேரும் ஓடி வரலாமா? நீங்களா பிரமதகணங்கள்? உங்களுக்கு வீரம் இல்லையா? நீங்களா பிரமதகணங்கள்? உங்களுக்கு வீரம் இல்லையா? உடனே சென்று அவனைத் துரத்தி விட்டு வாருங்கள்!' என்று புன்னகை யுடன் கூறினார். அதனால் பிரமத கணங்கள் கணபதியிடம் சென்று, 'சிறு பிள்ளையைப் போலப் பேசுகிறாயே! சீக்கிரம் இவ்விடமிருந்து போகாவிட்டால் எங்கள் பராக்கிரமத்தைக் காட்டுகிறோம் பார்' என்றார்கள். இது போலப் பலமுறைகள் அவர்கள் சொல்லியும் கணபாலர் காவலிருந்து இடத்தை விட்டு நகரவில்லை. இதற்குள் அந்தப்புரத்திலிருந்த பார்வதிதேவியும் அவளது தோழியரும் கணபாலருக்கும் பிரமத கணங்களுக்கும் நடந்த பேச்சுக்களைக் கேட்டார்கள்.

'இன்றையதினம் நமது சேவகன் வாயிலைக் காவல் செய்யாமல் இருந்திருந்தால் சிவபெருமான் மட்டுமின்றி மற்ற பிரமதகணங்களும் நாம் நீராடும் போது நம் அந்தப்புரத்தின் மாளிகையினுள்ளே வந்திருப்பார்கள். அப்படி எல்லோரும் வந்திருந்தால் நன்றாக இராது. கணன் நல்ல காரியஞ் செய்தான். கணங்களுக்கும் கணநாதனுக்கும் வாக்குவாதம் நடக்கிறது. இதுவரை அவன் ஒருவரைக்கூட உள்ளே விடவில்லை அவர்களது வாய்ச்சண்டை முற்றி அவர்கள் ஜெயித்தாவது உள்ளே வரக்கூடும். அல்லது விநயத்தாலாவது உள்ளே வரக்கூடும் நமதுகணனைத் தொந்திரவு செய்வது நம்மை தொந்திரவு செய்வது போன்றதாகும். தாயே இந்தச் சமயத்தில் நாம் சிறிது கண்டிப்பாக இருக்கவேண்டும்!' என்று தோழி வற்புறுத்திக் கூறினாள்.

பார்வதிதேவி கணபதியின் மீது அபிமானமுடைய வளாய் என் நாதராக இருந்தாலும் சிவபெருமான் நம் வாசலில் காவலிருப்பவனை ஏன் தொந்திரவு செய்யவேண்டும்? அவனை வேண்டிக் கொள்ளக் கூடாதோ?' என்று சொல்லி, அந்தத் தோழியை கணனிடம் அனுப்பி 'ஒருவரையும் உள்ளே அனுப்ப வேண்டாம்! என்று மீண்டும் கட்டளையிட்டாள். அந்தத்



தோழியும் வெளியே சென்று கணனைக் கண்டு' நீ செய்யும் கடமை சிறப்பானது: நீ ஒருவரையும் உள்ளே விட வேண்டாம் இந்தப் பிரமதர்கள் உன்னை வெல்ல மாட்டார்கள். அவர்கள் போர் செய்தால் நீயும் உன் பராக்கிரமத்தைக் காட்ட வேண்டும். அவர்கள் உன்னை ஜெயித்தாவது அல்லது உன்னிடம் நல்வார்த்தை கூறியாவது தான் உள்ளே வருவார்கள்? ஜாக்கிரதை! இது தேவியின் கட்டளை' என்று சொன்னாள். உடனே கணபதி தன்தாயின் ஆணையின்படி, கட்டியிருந்த ஆடையை இழுத்துக் கட்டிக் கொண்டு கிரீடம் தரித்து, தொடையைத் தட்டி 'பிரமத கணங்களே! நானோ பார்வதி புத்திரன்! நீங்களோ சிவகணங்கள்! நாமிருவரும் சமபலமாகச் சேர்ந்தோம். செய்யத்தக்கதை பார்ப்போம். இனி உங்களுக்கு உரிய ஆக்ஞையைச் செலுத்திச் சிவாக்கினையைக் காத்துக் கொள்ளங்கள், நானும் என்னுடைய தாயின் கட்டளைப்படி நடந்து கொள்ளுகிறேன். நீங்கள் உள்ளே செல்லவேண்டுமானால் என்னை ஜெயித்தாவது என்னிடம் உத்தரவு பெற்றாவது போக வேண்டும்' என்று கர்ஜித்தார்.

சிவ கணங்கள் வேறு வழியின்றி சிவபெருமானிடம் மீண்டும் ஓடி அவரை வணங்கி, நடந்தவற்றையெல்லாம் சொன்றார்கள். அதைக் கேட்டதும் சிவபெருமான் யோசிக்கலானார். 'நாம் உத்திரவு பெற்று உள்ளே சென்றால் பெண் கட்டளைக்கு உட்பட்டவரா வோம். ஆகையால் நாம் அனைவரும் போர்புரிய வேண்டுவதே முறை, எவ்வாறாயினும் முடியட்டும்!' என்று முடிவு செய்து, சிவ பிரமதகணங்களை நோக்கி, 'நீங்கள் பிரமதகணங்களாக இருந்தும் போர் செய்வதை விட்டு, வேண்டிக் கொள்வது யுதமல்ல. பார்வதியின் செயல் நன்றாக இல்லை! அதற்குரிய பயனை அவளும் அனுபவிப்பாள். யுத்தம் செய்ய வேண்டுவதே யுக்தமானது! என்றார்.

**அடுத்த இதழில் கணபாலர் போர்புரிந்த கதை தொடரும்**

28ம் பக்கம் தொடர்சி )

8. இவ் ஆலயங்களின் கதவு திறந்தபடியே இருக்ககாரணம் யாது?

.............................................................................

9. கிராமியத் தெய்வ வழிபாடு நிலைத்து நிற்பதற்கான காணம் யாது?

.............................................................................

10. மட்டக்களப்பில் உள்ள கிராமிய தெய்வங்கள் எவை?

.............................................................................

**விடைகள்**

1. ஆகம முறைக்கு உட்பட்ட வழிபாட்டு முறை, ஆகம முறைக்கு புறம்பான வழிபாட்டுமுறை
2. பக்தியும் நம்பிக்கையும்
3. வைரவர், வீரபத்திரர், ஐயனார், காத்தவராயன் முனியப்பர், பெரியதம்பிரான்
4. மடை, பொங்கல், சடங்கு, கூத்து
5. மடை, சந்தனக்காப்பிடல்
6. காவல் தெய்வம், குல தெய்வம்
7. வன்னி, யாழ்ப்பானம், மட்டக்களப்பு, திருகோணமலை
8. வீர தெய்வம், காவல் தெய்வமாக உள்ளமை
9. நம்பிக்கை, பக்தி
10. காளி, வைரவர், வீரபத்திரர், ஐயனார், காத்தவராயன், நாச்சியார்

## கிராமியத் தெய்வங்கள்

**"சாந்தையூரான்"**

வழிபாட்டுமுறைகள்

↓

ஆகமுறைக்கு உட்பட்ட வழிபாட்டு முறை | ஆகம முறைக்கு புறம்பான வழிபாட்டு முறை

↓

பக்தி, நம்பிக்கை என்பவற்றுக்கு முதன்மை அளிக் கப்பட்டு வரும் வழிபாட்டு முறை பிரதேசங்களுக்கிடையே வேறுபடுகின்றது.

↓

வழிபாட்டு தெய்வங்கள்

↓

வைரவர், வீரபத்திரர், ஐயனார், காத்தவராயன், முனியப்பர், பெரியதம்பிரான் முதலியவர்கள் ஆண்தெய்வங்கள்

↓

பெண் தெய்வங்கள்

↓

கண்ணகியம்மன், மாரியம்மன், காளி, நாச்சிமார்

↓

தெய்வ வழிபாட்டு முறையும் அதற்கான காரணமும்

| தெய்வம் | வழிபாட்டு பிரதேசம் | வழிபடுவதற்கான காரணம் | வழிபாட்டு முறை |
|---|---|---|---|
| 1. வைரவர் | வன்னி, யாழ்ப் பாணம், மட்டக் களப்பு | காவல் தெய்வம் | மடை |
| 2. வீரபத்திரர் | வன்னி, யாழ்ப் பாணம், மட்டக் களப்பு | காவல் தெய்வம் | பொங்கல் |
| 3. ஐயனார் | யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வன்னி, மாதம்பை, குருநாகல் | காவல் தெய்வம் | சந்தனக்காப்பிடல் மடை |
| 4. அண்ணன்மார் | யாழ்ப்பாணம், வன்னி | குல தெய்வம் | மடை |
| 5. பெரியதம்பிரான் | யாழ்ப்பாணம், வன்னி | குல தெய்வம் | பொங்கல், மடை |
| 6. முனியப்பர் | யாழ்ப்பாணம் | வீரவணக்கம் | சடங்கு |
| 7. காத்தவராயன் | யாழ்ப்பாணம், மலையகம் மட்டக்களப்பு, திருகோணமலை | காவல் தெய்வம் | பொங்கல், மடை கூத்து |
| 8. காளி | யாழ்ப்பாணம், மட்டக்களப்பு திருகோணமலை மட்டக்களப்பு, | காவல் தெய்வம் | சடங்கு |
| 9. மாரியம்மன் | மலையகம் வன்னி யாழ்ப்பானம், | குளிர்ச்சியைத் தருபவர் நோய் நீக்கல் | மடை, பொங்கல் கரகாட்டம், குளிர்த்தி |
| 10. நாச்சிமார் | வன்னி மட்டக்களப்பு, | காவல் தெய்வம் | பொங்கல் |
| 11. கண்ணகி | வன்னி, யாழ்ப் பாணம். | காவல் தெய்வம் குளிர்த்தி | பொங்கல் |

தெய்வங்களை வணங்கும் முறை

↓

மிக எளிய வணக்க முறை பின்பற்றப்படுகின்றன. வணக்க முறைச் சடங்குகள்

↓

கும்பம் வைத்தல், மடை, பலியிடுதல்

↓

குலதெய்வமாகவும், காவல் தெய்வம்

↓

கோயில்கள் வயல்வெளிகள், காட்டுப்பகுதி, நெடுஞ்சாலையில் அமர்ந்திருக்கும்.

### I. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. வழிபாட்டு முறைகள் எவை?

..................................................................

2. கிராமிய தெய்வ வழிபாட்டுமுறை மேற்கொள்ள காரணம் யாது?

..................................................................

3. ஆண் கிராமியத் தெய்வங்கள் எவை?

..................................................................

4. கிராமியத் தெய்வங்களின் வழிபாட்டு முறைகள் எவை?

..................................................................

5. கிராமியத் தெய்வ வழிபாட்டு முறையிலுள்ள சடங்குகள் எவை?

..................................................................

6. இத் தெய்வங்களை எத்தகைய தெய்வங்களாக போற றப்படுகின்றன?

..................................................................

7. இத் தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?

..................................................................

தொடர்சி 27ம் பக்கம்.



# நடுவூர்க் கற்பகத்தை காண்பதினி என்று !

பண்டிதர் ச. சுப்பிரமணியம்

முத்தமி ழினுக்கும் முதுவரம் பாய முனிமுதல் மாணவன் முதிர்ந்த
சுத்தனின் தொல்காப் பியனுரை தொன்னூல் துரிசறத் தெளிந்த
வித்தகர் கணேச விப்பிரர் பாற்சார் வித்தியா ரத்தின விளக்கே
ஒத்தமை உரவோன் ஒண்கலை உணர்ந்தோன்இல்கணவித்தகவிருதோன்.

தெண்ணிலா முடியோன் சைவசித்தாந்தம்தெரிபொருள் தோந்து சொல் தெளிவான்
உண்ணிலாவுரிமைத் தேசிகர் மரபான்கற்றவர்க்(கு) உசாத்துணை உறவான்
எண்ணிலாங் கவிஞன் இறைபத்தி இயல்பான் இயற்றமிழ் நூலெலாம் இனிதே
கண்ணிலா மலகக் கனியெனவிருந்தாய்க் காட்டொடு கருத்துற விரிப்பான்.

கேட்டவர் அகலாக்கிழமைய ராகக் கேட்டிலார் வேட்பவும் உரைசால்
ஈட்டவன் எவர்க்கும் இனியவே இயம்பிஎதிரிலா ஏற்றமோ டிருந்தான்
தேட்டவன் செவ்வேள் திருவடி நிழலேசந்நிதி மாவைசேர் சீரார்
பாட்டவன் எளிமைப் பவித்திரப் பண்பன்நமச்சிவா யப்பெயர் படைத்தோன்.

நாமமந் திரமாய் நவில் நமச் சிவாயம் நாமெலாம் நவிலவே நட்பாய்
ஏமமந்திரப்பேர்இயல்பினால்இருந்தே இயற்கையாய் எமையிகந் தேகித்
தாமமந் திரமாம் சிவசணமுகன்தாள்சார்வுறீஇ மீட்டிவன்சாரா(து)
ஆமமந் திரசிவ மாவதே அடைந்தாய்ஆவதிப் பேறிதற் புதமோ.

கட்டுவனில்கண்டோம்கந்தனடிக்காதலன்
கட்டழியக் கந்தழியாய் நான்மகளாய் - ஒட்டுறவை
நண்ணு ம் சிவாயம் நமசிவாயம்நாமன்
பண்ணு ம் பயனீது பற்று.

நாற்கூட்டமிர்தமேநாளுமதன்நாசுவைக்க
நூற்கூட்டுளபொருளாம்நு ண்ணமிர்தம் - நாட்கூட்ட
நற்கருத்தர்க்கீந்தநமசிவாயம்நடுவூர்க்
கற்பகத்தைக் காண்பதினி என்று.

## குரும்பசிட்டிப் பண்டிதர் நடராஜன்.

**இவ்வுலகப் பற்றறுந்து போயினனோ?**

**நேரிசை வெண்பா**

நற்றமிழில் வல்ல நடராஜ னிவ்வுலகப்
பற்றறுந்து போயினனோ பைந்தமிழ்த்தாய் - சிற்றடியை
நாடி நடந்தனனோ நங்க ளிடர்சகியா
தோடி யொளித்துவிட்டனோ.

பற்றிலரும் போற்றுமுயர் பாங்க னடராஜன்
உற்றதன்பொற் றேக முகுத்ததென்ன - வெற்றுநில
மானயாழ்ப் பாணமறித் தற்றைச் செழுமைநிலை
யானநில மாக்குவிருப் பா.

நடராஜன் பண்பு நலராஜன் பத்தித்
திடராஜன் சொல்ராஜன் செம்மைக் - கிடராஜன்
பாரகத்தை விட்டுப் பசுந்தமிழை யும்மறந்தெவ்
வூரகத்து ராஜனானா னோ.

மாணாக்கர் தம்மகத்து மாசை யொழித்தொப்புக்
காணாக்கண் ணான கலைநிதியம் - தூணாகக்
கன்னற் றமிழ்மரபைக் காத்த நடராஜன்
பொன்னகர மேனுற்றான் போய்.

பொன்னகர மென்றதற்கோ பொன்னிலங்கை யானவிது
புன்மையிலங் கும்புரமாய்ப் போனதென்னுந் - தன்மையாலோ
எங்கணட ராஜனியைந்தவுட னீத்துங்குத்
தங்குமனங் கொண்டவது தான்.

எண்டிசையும் போற்று நடராஜ னெனுமினிய
பண்டிதனை வானுலகம் பற்றியதென் - மண்டிசைச்சீர்த்
தென்றமிழி லுந்தாந் திளைத்து மகிழ்வுறலா
மென்றவிருப் புற்றோ வியைந்து.

கனகசெந்தி நாதனையோ காசியையரான
தினகரனை யோதமிழ்த்தாய் சென்னிக் - கனகமணி
மட்டுவிலார்க் காணவாஞ்சை மாண்போ நடராஜ
தொட்டிழுத்த துன்னையங்குச் சொல்.

- பம்பலப்பிட்டிக் கா.நீ.

## [illegible]

உதவிப் பயன் உடையார் உண்டு பரிவார்
அதற்கொரு தான் தோற்ற தோன்றும் விபவம்
திறந்துள் வாழ்ந்தும் என்பார்

நாம் ஒருவருக்குச் செய்த உதவியின் பயனையும் அளவையும் வெளியே சொல்லமாட்டார்கள். அன்போடு உண்ணத்தந்த உணவை இகழ்ந்து பேசமாட்டார்கள். தான் செய்த தான தருமங்களையும் மேற்கொண்ட விரதங்களையும் பற்றித் தாமே, பெருமை பேசிக் கொள்ள மாட்டார்கள் - ஒழுக்க நெறிவழியே வாழ்வோம் என்று நினைப்பவர்கள்.

## [illegible]

| | | | |
|---|---|---|---|
| 01. | 17.10.2000 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| 04. | 20.10.2000 | வெள்ளி | ஐப்பசிவெள்ளி |
| 05. | 21.10.2000 | சனி | சத்தியார் குருபூசை |
| 07. | 23.10.2000 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| 08. | 24.10.2000 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| 10. | 26.10.2000 | வியாழன் | தீபாவளி |
| 11. | 27.10.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, அமாவாசை விரதம், கேதார கௌரி விரதம், மெய்கண்ட தேவர் குருபூசை |
| 12. | 28.10.2000 | சனி | கந்தசஷ்டி விரதாரம்பம். |
| 13. | 29.10.2000 | ஞாயிறு | பூசலார் குருபூசை |
| 15. | 31.10.2000 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 16. | 01.11.2000 | புதன் | ஐயடிகள் காடவர் கோனார் குருபூசை |
| 17. | 02.11.2000 | வியாழன் | கந்த சஷ்டி விரதம் |
| 18. | 03.11.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| 22. | 07.11.2000 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| 24. | 09.11.2000 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 25. | 10.11.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, திருமூலர் குருபூசை |
| 26. | 11.11.2000 | சனி | பூரணை விரதம், நெடுமாறர்குருபூசை |
| 27. | 12.11.2000 | ஞாயிறு | கார்த்திகை விரதம், இடங்கழியார் குரு பூசை |
| 30. | 15.11.2000 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |

## இதுவும் கூடாது

உதவிப் பயன் உரையார் உண்டி பழியார்
அறத்தொடு தான் நோற்ற நோன்பு வியவார்
திறத்துளி வாழ்த்தும் என்பார்

தாம் ஒருவருக்க செய்த உதவியின் பயனையும் அளவையம், வெளியே சொல்லமாட்டார்கள். அன்போடு உண்ணத்தந்த உணவை இகழ்து பேசமாட்டார்கள். தான் செய்த தான தருமங்களையும் மேற்கொண்ட விரதங்களையும் பற்றித் தாமே, பெருமை அடித்துக் கொள்ள மாட்டார்கள் - ஒழுக்க நெறிவழியே வாழ்வோம் என்று நினைப்பவர்கள்.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஐப்பசி | 01. | 17.10.2000 | செவ்வாய் | மாதப்பிறப்பு |
| | 04. | 20.10.2000 | வெள்ளி | ஐப்பசிவெள்ளி |
| | 05. | 21.10.2000 | சனி | சத்தியார் குருபூசை |
| | 07. | 23.10.2000 | திங்கள் | ஏகாதசி விரதம் |
| | 08. | 24.10.2000 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 10. | 26.10.2000 | வியாழன் | தீபாவளி |
| | 11. | 27.10.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, அமாவாசை விரதம், கேதார விரதம், மெய்கண்ட தேவர் குருபூசை |
| | 12. | 28.10.2000 | சனி | கந்தஷஷ்டி விரதாரம்பம். |
| | 13. | 29.10.2000 | ஞாயிறு | பூசலார் குருபூசை |
| | 15. | 31.10.2000 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 16. | 01.11.2000 | புதன் | ஐயடிகள் காடவர் கோனார் குருபூசை |
| | 17. | 02.11.2000 | வியாழன் | கந்த ஷஷ்டி விரதம் |
| | 18. | 03.11.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி |
| | 22. | 07.11.2000 | செவ்வாய் | ஏகாசி விரதம் |
| | 24. | 09.11.2000 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 25. | 10.11.2000 | வெள்ளி | ஐப்பசி வெள்ளி, திருமூலர் குருபூசை |
| | 26. | 11.11.2000 | சனி | பூரணை விரதம், நெடுமாறர்குருபூசை |
| | 27. | 12.11.2000 | ஞாயிறு | கார்த்திகை விரதம், இடங்கழியார் குரு பூசை |
| | 30. | 15.11.2000 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |



Regd. No. QD/22/New 2000 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 712, புளுமேண்டல் வீதி, கொழும்பு 15
என்னும் முகவரியிலுள்ள கலர் பிறின்ஸ் இல் அச்சிட்டு 06.10.2000 இல் வெளியிடப்பட்டது.